www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


# "வண்ணத்துப்பூச்சி"

மலர்: 06 இதழ்: 01

ஆசிரியர்:
'காசி' வி. நாகலிங்கம்

வடிவமைப்பு:
மஞ்சுளா

கணனிப்பதிப்பு:
சுலக்ஷினி

அச்சுப்பதிப்பு:
விவேகானந்தா அச்சகம்
பாரிஸ் 48 46 07 40

ZUR ESSENTHER MUHLE 4,
3538 MARSBERG 15,
GERMANY.
Tel & Fax: 02992/5855

79, Av. des M. Chateaubriant,
93700 Drancy,
France.


## எண்ணம்

வாசகர்களினதும், எழுத்தாளர்களினதும், நண்பர்களினதும் அரவணைப்பால் 'வண்ணத்துப் பூச்சி' தன் ஆறாவது பிராயத்தில் தனது வளர்ச்சியை மேலும் ஒரு படிக்கு உயர்த்தியுள்ளது. இது வரை காலமும் இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை வெளிவந்த 'வண்ணத்துப் பூச்சி' இன்று முதல் சற்று வித்தியாசமாய் முழுமையான குறுநாவல் ஒன்றுடனும் மற்றும் வழமையான அம்சங்களுடனும் தொடரவிருக்கின்றது என்பதை வாசகநேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஐரோப்பாவில் வளர்ந்து வரும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்கள் ஆக்கங்களை வெளியுலகத்திற்கு திறந்து வைக்கும் நல்ல நூல் வெளியீட்டாளர்களான 'ரஜனி பதிப்பகம்' எங்கள் 'வண்ணத்துப்பூச்சி' சஞ்சிகையின் இந்த முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்க முன்வந்திருக்கிறது. ரஜனி பதிப்

www.padippakam.com

பகத்தின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்று 'வண்ணத்துப்பூச்சி' இன்றுமுதல் ஐரோப்பிய நாடுகளெங்கும் தனது பணியைத் தொடக்குகிறது. அவர்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
மேலும் வாசகர்களிடமிருந்தும் எழுத்தாளர்களிடமிருந்தும் ஆக்கங்களை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.
புதிய சந்தா விபரங்கள் இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசகர்களாகிய நீங்கள் இதுவரை வழங்கி வந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது பணியைத் தொடர்கிறோம்.

## சீதனம்

அன்று
காசு நகை வீடு என்று
சீதணமாய் நான் பெற்றதற்கு - என்னை
ஏளனம் செய்தவர்கள் ஏராளம் பேர்
எள்ளி நகைத்தோர் எண்ணற்றோர்

இன்று
காசு நகை வீடு இல்லாததால்
இன்னமும் என் மகள் கன்னி தான்
சீதனம் கொடுக்கவழி இல்லாதவனென்று
ஏளனம் செய்கின்றார்கள் எல்லோருமென்னை

**- வண்ணை தெய்வம்**

படிப்பகம்

www.padippakam.com

"காசி"

# "சொந்தமும் சோதனையும்"

நேரம் பிற்பகல் மூன்று மணியைத் தாண்டி விட்டது. வானத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சூரியன் இன்னும் தீப்பிழம்பாகக் கனன்று கொண்டிருந்த நேரம். சிவா பாடசாலையை விட்டு சைக்கிளில் வீட்டை நோக்கி விரைந்தான். ஆசிரியர் பணியில் ஐந்து ஆண்டுகளைக் கடந்துவிட்ட அவனுக்கு கடந்த வாரம் தான் திருமணம் நிறைவேறியிருந்தது. வீட்டில் மகிழ்ச்சி சமுத்திரமாகப் பொங்கிப் பாய்ந்தது. இன்று குடும்பத்தோடு சினிமா பார்க்கப் போக ஒழுங்காகியிருந்தது. அதனால் சிவா, பாடசாலை முடிவடைய அரை மணிநேரம் இருந்தபோதும், அதிபரிடம் கூறிவிட்டுப் புறப்பட்டிருந்தான்.,

"சீ, சீ நான் வரவில்லை. அரையும் குறையுமாகக் கட்டிப்பிடித்து ஆடுங்கள். நான் வீட்டில் இருக்கிறேன். நீங்கள் போய் வாருங்கள் " என்றார் அப்பா. துளசி அவர் கையைப் பிடித்து, "மாமா ! நீங்கள் வராவிட்டால் நானும் போகவில்லை" என்றாள். "நீ இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த சந்தோஷத்தைக் கொண்டாடத் தானே சினிமா போக ஒழுங்கு செய்தோம். நீயே வீட்டிலிருப்பது என்றால்...?" என்று சிரித்தார் கனகர்.

"வீட்டிற்குப் பெரியவர் நீங்கள் வராதபோது எங்களுக்கென்ன சந்தோஷம் வேண்டியிருக்கு ? என்று கவலையுடன் கேட்டாள் துளசி.

' என் வீட்டிற்கு வந்த மகாலட்சுமியடி நீ' என்று மனதிற்குள் தன் முதல் மருமகளைப் பாராட்டிக்கொண்டே வேட்டி, சேட் தேடி எடுத்து அணிந்து கொண்டு வானில் ஏறினார். அம்மா கண்ணகி முதலே ஏறி உட்கார்ந்து விட்டாள். அவள் கடைசியாகச் சினிமா பார்த்துப் பத்து வருடங்கள் இருக்கும். கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட அவள் விரும்பவில்லைப் போலும்.

சிவாவிற்கு நான்கு சகோதரங்கள். இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள். எல்லோரும் வளர்ந்தவர்களே. சுகு சிவாவிற்கு நேரே இளையவன். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கின்றான். அடுத்து மாலினி, படிப்பை முடித்துவிட்டு திருமண வயதில் நிற்கிறாள் மூன்றாவது கோமதி ஏ. எல். கடைசி வருடம். கடைசி ரமணி பத்தாம் வகுப்பு இரண்டு தடவைகள் பரீட்சை எடுத்தும் தவறிவிட்டான். மூன்றாம் தரம் எடுப்பதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தான். எல்லோரும் அண்ணனே தெய்வமென்று வாழ்பவர்கள்.

அப்பா கனகர் சி. ரி. பி. றைவராக இருந்தவர். வயது போய்விட்டது. வேலையும் இல்லை. 'பிறவுடன் பண்ட்' எடுத்து பழைய கடன்கள்

www.padippakam.com



கொடுக்கவே போதவில்லை. சிவாவிற்கு வேலை கிடைந்தது. குடும்பப்பாரத்தை அவன் தனியாகத் தூக்கத் தொடங்கினான். தம்பிமார், தங்கைகள் படிக்க வேண்டும். அவர்களை நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்பதே அவன் முதல் இலட்சிய மாக இருந்தது.

தியேட்டரில் கூட்டம் குறைவு. சிவா எல்லோருக்கும் ரிக்கற் வாங்கி வந்தான். படம் தொடங்கி அரை மணித்தியாலத்தின் பின் கதை புரிந்தது. சண்டைக்காட்சிகள் அதிகமாக இருந்ததால் அலுப்புத் தட்டியது சிவாவிற்கு. துளசியுடன் சொறியலாமென்றால் பக்கத்தில் அம்மா, பின்னுக்கு தம்பிமார் அவனது கைகள் மட்டும் துளசியின் கைவிரல்களை வருடிக் கொண்டிருந்தன. அந்த இரண்டரை மணி நேரமும் அப்படியே அவனுக்குக் கழிந்தது.

மாலினிக்குத் திருமணமாக வேண்டும். சுகு படித்து முடித்து வேலை கிடைக்கவேண்டும். அதன்பின்பே குழந்தை பெற்றுக்கொள்வது என்று சிவாவும் துளசியும் கட்டுப்பாட்டுடன் இருந்தார்கள்.

சிவா சீதனம் கொடுப்பது, வாங்குவதை விரும்பாதவன், துளசியைத் திருமணம் செய்யும்போது , அவள் பெற்றோர் கொடுக்க இருந்த சீதனத்தை முழுதாக மறுத்துவிட்டான். நகை கூட வேண்டாமென்று அவன் ஒற்றைக்காலில் நின்றபோது,

" வெறுமனே எங்கள் பிள்ளையை நீங்கள் மனைவியாக ஏற்றுக்கொள் வது உங்கள் பெருந்தன்மை தான். ஆனால் அப்படி வெறுங்கழுத்து டன் நாங்கள் விட்டால் நாங்கள் வெளியே நடமாடமுடியாதல்லவா ?" என்று மகளுக்கென்று செய்து வைத்திருந்த நகைகளைப் போட்டுவிட் டாள் அம்மா.

நாட்கள் நகர்ந்தன.

ரமணி எஸ். எஸ். சி. பாஸ் பண்ணிவிட்டான். அவனுக்கு தொடர்ந்து படிக்க ஆவலிருந்தபோதும், நாட்டிலே பிரச்னை, பாதுகாப்புத் தேடி அவன் வயதொத்த பலர் வெளிநாடு செல்வது கண்டு அவனும் வெளிநாடு செல்லப் புறப்பட்டான்.

துளசி, தன் நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள். வேறு வழியின்றி அவற்றை அடகு வைத்து ரமணியைப் பயணம் அனுப்பி வைத்தான் சிவா.

சுகுவிற்கு படிப்பு முடிந்த பின்னரும் சில நாட்கள் வீட்டில் இருந் தான். தபாற் திணைக்களத்தில் வேலை கிடைத்ததும் அண்ணனின் கால்களில் வீழ்ந்து நன்றி கூறினான். சிவாவிற்கு ஆனந்தக்கண்ணீர் கொட்டியது.

கனகரும், கண்ணகியும் தங்கள் பிள்ளைகளின் உயர்வு கண்டு பேருவகை எய்தினர்.

கோமதியும் ஏ. எல். பாஸ் பண்ணிவிட்டாள். பல்கலைக்கழக அனுமதி கிடைத்த போதிலும் அவளுக்கு வங்கி ஒன்றில் வேலையும் கிடைத் தது. அவள் படிப்பைத் தொடர விரும்பவில்லை.

கனகர் வீட்டிலே ஒரே கொண்டாட்டம். எல்லாப் பிள்ளைகளும் சம்பளத்தை எடுத்து அம்மா கையில் கொடுத்தார்கள். அம்மா அதை வாங்கி துளசியிடம் கொடுத்தாள். துளசி அப்பணத்துடன், குடும்ப வரவு செலவுகளைச் சிக்கனமாகக் கவனித்ததுடன், தனது மைத்து னிமார்களிற்கு திருமணத்திற்கென்று சேமிக்கவும் தொடங்கினாள்.

படிப்பகம்

www.padippakam.com



"முதலில் அடைவில் இருக்கின்ற அண்ணியின் நகைகளை மீட் போம். பிறகு எங்கள் திருமணத்திற்குச் சேமிக்கலாம்" என்றனர் மாலினியும், கோமதியும்.
" அண்ணியின் நகைகளை மீட்டுக் கொடுப்பது என் வேலை " என்றான் சுகு.
" எப்படியோ என் மருமகளின் நகைகள் மீண்டும் அவள் கழுத்திற்கு வந்தால் சரி " என்றாள் கண்ணகி.
அப்போ இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிவா பொன் னாலை வரதராஜருக்கு நன்றி சொன்னான்.
"பசிக்கிறது கண்ணா. வெறும் பாண் தந்தாலே போதும் என்று தானே கேட்டேன். நீயோ பாலும் பழமும் அள்ளியள்ளிக் கொடுத்தி ருக்கிறாயே அப்பா !" என்று அவன் கண்களில் ஆனந்தம் நுரைபொங் கியது.
மறுநாள் டென்மார்க்கிலிருந்து ரமணியின் கடிதம் வந்தது. தொழிநுட் பக் கல்லூரி ஒன்றில் அனுமதி கிடைத்து, அங்கு படிப்பதுடன், மிகுதி நேரங்களில் வேலை செய்கின்றேன் என்றும் பணம் அனுப்பி யுள்ளேன் அண்ணியின் நகைகளை மீட்டுக் கொடுக்கவும். எல்லோ ருக்கும் எனது நன்றிகள். அண்ணனுக்கும் அண்ணிக்கும் விசேடமாக எனது நன்றிகள் என்றும் எழுதியிருந்தான்.
"கடைக்குட்டி எங்களையெல்லாம் முந்திவிட்டான்" என்று சிரித்துக் கொண்டே தமாஸாகக் கூறினான் சுகு.
மாலினிக்கு மாப்பிள்ளை பார்த்தாகிவிட்டது.
"சீதனம் நாங்கள் தரமாட்டோம் " என்றான் சிவா.
"அப்போ , எங்களைத் தரச்சொல்லுகிறீங்களா ? என்றார் மாப் பிள்ளை மாதவன்.
"இல்லை. மாப்பிள்ளையும் பெண்ணும் விற்பனைப் பண்டங்களல்ல, பணத்தால் ஒப்பந்தம் செய்வதற்கு, நாங்கள் மனிதர்கள். உண்மை அன்பை மூலதனமாகக் கொண்டு இதயத்தில் ஒப்பந்தம் செய்வது தான் திருமணமாகும்" என்றான் சிவா.
"சரி !" என்று சம்மதித்தனர் மாப்பிள்ளை வீட்டார். திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திருமணத்திற்கு சுகுவுடனும் கோமதியுடனும் வேலை செய்யும் நெருங்கிய நண்பர்கள் வந்திருந்தனர். அப்போது தான் தெரிய வந்தது சுகுவும் கோமதியும் தமக்கென வாழ்க்கைத் துணைகளைத் தேர்ந்தெடுத்து விட்டார்களென்று,
" வயது வந்த பிள்ளைகள் காதலிப்பதில் தவறு இல்லை. ஆனால் கவனமாகப் பழகவேண்டும். தப்புத்தண்டா நடந்தால் அப்பா, அம்மா வேதனைப்படுவார்கள் " என்று சுகுவிற்கும் கோமதிக்கும் நாசூக்கா கச் சொல்லி வைத்தான் சிவா.
சுகுவின் சுமனாவும் கோமதியின் கோபாலுவும் அடிக்கடி கனகர் வீட்டிற்கு வந்து போவார்கள். அவர்களை மனமார வரவேற்றது கனகர் குடும்பம்.
கோமதிக்கும் கோபாலுக்கும் திருமணம் நிச்சயம் செய்ய பெரியோர் கள் கூடினர். கோபாலுவின் பெற்றோர் இரண்டு லட்சம் சீதனம் தரும்படி கேட்டனர்.
"நாங்கள் சீதனம் வாங்குவதுமில்லை. கொடுப்பதுமில்லை " என்றான் சிவா.

படிப்பகம்

www.padippakam.com



" அப்படி நீங்கள் ஒரு கொள்கை வைத்திருக்கலாம். ஆனால் நாங்கள் இப்படி ஒரு கொள்கையை வைத்திருக்கிறோமே சீதனம் வாங்கித் தான் கல்யாணம் செய்வதென்று "கோபாலின் அப்பா கூறினார்.

"சீதனம் கொடுப்பதும், வாங்குவதும் தவறு. இதனை நான் உங்களுக்குச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அது மட்டுமல்ல தங்கச்சியும் கோபாலும் ஒருவரை ஒருவர் மனமார விரும்பிவிட்டார்கள். சேர்த்து வைக்கவேண்டியது இருகுடும்பத்தினரதும் கடமை"

" நான் அதற்கு மறுக்கவில்லையே. தாராளமாகக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். ஆனால் நீங்கள் என் மகனுக்கு இரண்டு லட்சம் சீதனம் கொடுக்கவேண்டும். இதனால் நீங்கள் எந்தவிதத்திலும் குறைந்துவிடப் போவதில்லை. உங்களிடம் நாங்கள் பணத்தை உடனே எதிர்பார்க்கவில்லை. உங்களுக்கு வசதியானபோது கொடுக்கலாம்,."

"பணம் இல்லை என்பதற்காகச் சீதனம் தர மறுக்கவில்லை. நாங்கள் எல்லோரும் வேலை செய்கிறோம். நினைத்தால் இன்றே மாறி இரண்டு இலட்சத்தையும் தரமுடியும். இப்படியான ஒரு தீயபழக்கத்தை எங்கள் சமுதாயத்திலிருந்து நாங்கள் களைந்தெறிய வேண்டும் என்றபதற்காகத் தான்..."

" அண்ணா ! ஒரு விடயம்" என்று அவனை அழைத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள் கோமதி. அங்கிருந்த அம்மா கண்ணகி அவனைப் பார்த்து ," தம்பி உன் இலட்சியம் பெரிது தான். ஆனால் அதற்காக இந்த நல்ல சம்பந்தத்தை தள்ளி வைக்க முடியுமா ?" என்றாள்.

"அம்மா ! கோபால் இவளை மனமார விரும்பினால் தன் பெற்றோரைச் சமாளித்து , சீதனமில்லாமல் எங்கள் வீட்டில் திருமணம் செய்ய வருவான்."

"அண்ணா ! நீ எங்கள் குடும்பத்திற்காக நிறையக் கஷ்டப்பட்டிருக்கிறாய். இது எனது கல்யாணம். சீதனத்தைப் பற்றி நீ கவலைப்படாதே. சீதனம் தரலாம் என்று சொல் போ" !

"எங்கள் சமுதாயப் பெண்கள் கஷ்டப்படக்கூடாது என்று தான் நான் சீதனம் வேண்டாம் என்றேன்அனால் பெண்ணாகப் பிறந்த நீயே அர்த்தமில்லாத மூடப்பழக்கத்திற்கு ஆதரவளிக்கிறாயே ?"

" நான் எந்த மூடப்பழக்கத்திற்கும் ஆதரவளிக்கவில்லை. இது என் வாழ்க்கை. முடிந்தால் உதவி செய்யுங்கோ. இல்லாவிட்டால் ஒதுங்கி வழிவிடுங்கோ. என் கல்யாணத்தை எப்படி நடத்துவது என்று எனக்குத் தெரியும்".

தங்கையின் வார்த்தைகள் சிவாவின் நெஞ்சில் முள்ளெனக் குத்தியது. முகத்தில் ஒரு சோகக் கோடு படர தாயையும் தங்கையையும் பார்த்துவிட்டு,

" சரி, அப்போ பணத்திற்கு என்ன செய்வது ? பேசினால் பேசிய பேச்சு மாறாமல் குறிப்பிட்ட திகதியிலே இரண்டு இலட்சமும் கொடுத்தாக வேண்டும்" என்ற சிவாவின் வார்த்தைகளில் துன்பம் இழையோடியிருந்தது.

www.padippakam.com



"அதற்கு நீங்கள் கவலைப்படவேண்டாம். சின்னண்ணாவும், தம்பியும் காசு தருவதற்குச் சம்மதித்து விட்டார்கள்." என்றாள் கோமதி இறுமாப்புத் தெறிக்க.

சிவாவுக்கு திக் என்றது. எந்தவொரு விடயம் என்றாலும், 'அண்ணா இப்படியிருக்கின்றது என்ன செய்யலாம் ? ' என்று ஆலோசனை கேட்கும் சகோதரங்கள் , இன்று இந்த முக்கிய விடயத்தில் தன்னை அணுகாமலேயே முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க, அவனாலேயே அதை ஜீரணிக்கமுடியவில்லை.

துளசி அவனைச் சமாதானப்படுத்தினாள். " நல்ல காரியம் நடந்தேறட்டும். உங்கள் தங்கை தானே மன்னித்துவிடுங்கோ " என்றாள்.

" இப்படி ஒரு புறக்கணிப்பு முதன் முதலாக எனக்கு என் வீட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. தம்பி சுகு இது பற்றி ஒரு வார்த்தை எனக்குச் சொல்லவில்லையே ? இரண்டு இலட்சம் மாறிகொடுக்கச் சம்மதித்திருக்கிறான்கள். அவனும் ரமணியும் அண்ணை இவன் இருக்கிறான் என்று நினைத்தார்களா?

சிவாவின் கண்களில் கண்ணீர்த்துளிகள் அரும்பியது.

" எங்களிடம் காசில்லை. அதுதான் அவர்கள் இதுபற்றி வாய்திறக்காமலே தாங்களே பேசி முடிவெடுத்துவிட்டார்கள்" என்றாள் துளசி.

"குஞ்சுகளிற்கு இறக்கை முளைத்துவிட்டது; ஒன்று பறக்கின்றது; அடுத்தது பறந்து பிறாண்ட வருகின்றது; மற்றவை என்னென்ன செய்யுங்களோ?" என்றான் சிவா கவலையுடன்.

கோமதிக்கும் கோபாலுக்கும்த திருமணம் நடைபெற்றது. சிவாவும் துளசியும் எதனையும் மனதிற் கொள்ளாமல் முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

ரமணி டென்மார்க்கிலிருந்து திருமண வாழ்த்து அனுப்பியிருந்தான்.

கனகரும், கண்ணகியும் தங்கள் பிள்ளைகள் உயர்வாயும், ஒற்றுமையாயும் இருப்பது கண்டு சந்தோஷம் நெஞ்சை நிரப்ப, முகமெல்லாம் ஆனந்தம் பரவ அவர்களைப் பார்த்து மகிழ்ந்தனர்.

திருமணம் நிறைவாகி ஒரு வாரம் இருக்கும். மாலினியின் கணவன் மாதவன் மதுவை நிறைய அருந்திவிட்டு வந்து "வேண்டி வாடி சீதனத்தை" என்று அட்டகாசம் செய்தான்.

இச்சத்தம் கேட்டு, 'என் பிள்ளையைக் கொல்கின்றான் என்று குழறினாள் கண்ணகி.

கனகர், சிவா, துளசி, யாவரும் அறக்கப் பறக்க படுக்கையை விட்டு எழுந்தோடி வந்தார்கள். 'என்னப்பா இங்கே நடக்குது' என்று மாதவனைப் பார்த்து கவலையுடன் கேட்டார் கனகர். அவர் வயதான உடம்பு சோகத்தில் ஆடியது.

"இளைய மகளிற்கு இரண்டு இலட்சம் சீதனம் கொடுத்திருக்கிறீங்க. மூத்தமகளுக்கு புறங்கையை மட்டும் காட்டி சீதனம் கொடுக்கமாட்டோம் நாங்கள் இலட்சியவாதிகள் என்றீர்களே ! என்ன பம்மாத்து இது ?"

"சிவா ! என்னடா இது ? மருமகன் என்ன சொல்கிறார் ?" கண்ணகி அதிர்ந்து போய் மகனைப் பார்த்தாள். " கல்யாணம் முடிந்து குடியும் குடித்தனமுமாய் வாழ்கிறீங்கள். இரண்டு மாதத்தில் குழந்தை வேறு பிறக்கப் போகின்றது. இத்தனைக்கும் பிறகு சீதனம் கேட்கிறியள்" என்றான் சிவா.

படிப்பகம்

www.padippakam.com



"நீங்கள் பேச்சு மாறிவிட்டீங்கள். அது தான் நியாயம் கேட்கிறன். ஒரு மகளிற்கு ஒரு கொள்கை. இன்னொரு மகளிற்கு இன்னொரு கொள்கையா ?"

" நான் கொள்கை மாறவில்லை. என்னை மீறி நடந்த கல்யாணம். சீதனம் நான் கொடுக்கவில்லை. தம்பிமார் தான் கொடுத்தான்கள்" என்றான் சிவா.

"சுத்துறீங்களா ? நான் ஒன்றும் காதில பூ பூவைச்ச பொம்மை யில்லை. பெரிய இடத்து மாப்பிள்ளையென்று அவனுக்குச் சீதனம் கொடுத்திருக்கிறீங்கள். நான் உங்கள் சொல்லிற்கு செவிசாய்த்ததால் என்னைச் செல்லாகாசாக புறக்கணித்திருக்கிறீர்கள். ஒன்று சொல் கிறேன் இன்னும் ஒரு மாதம் முடிவதற்குள் சீதனமாக இரண்டு இலட்சம் தரவேண்டும். இல்லாட்டி உன் அன்புத்தங்கையை அடித் துக் கொன்று போடுவேன்" என்று கூறிவிட்டுத் தன் அறைக்குள் போய்விட்டான்.

" அண்ணா, என்னை மன்னித்து விடு. என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம். நான் என்ன சொன்னாலும் அவர் கேட்கிறார் இல்லை. அடி வாங்குவது தான் மிச்சம்" என்று சிவாவின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள் மாலினி.

அவளைச் சமாதானப்படுத்தி, உள்ளே அனுப்பிவிட்டு அனைவரும் தங்கள் படுக்கைகளுக்கு திரும்பினர். சிவாவிற்கு நித்திரை வர வில்லை. புரண்டு புரண்டு படுத்தான்.

" என்னங்க ! யோசிக்காமல் படுங்கோ. விடியப் பள்ளிக்கூடம் போகவேணும் " என்றாள் துளசி. அவள் நெஞ்சிலும் எண்ணங்கள் தாறுமாறாக ஓடியதால் அவளாலும் தூங்கமுடியவில்லை.

" ஒரு தலையிடி மாற, இன்னொரு தலையிடி. முன்பிருந்த நிம்மதி யில் பத்திலொன்று கூட இல்லை. " பக்கத்துப் பாயில் படுத்திருந்த துளசியின் கையைப் பிடித்துக் கொண்டே கூறினான் சிவா.

அவள் புரண்டு அவன் பக்கம் திரும்பி, அந்த இருட்டிலும் அவன் முகத்தைப் பார்த்தாள். பின் தன் மென்விரல்களினால் அவன் கன்னத்தை வருடிக்கொண்டே, "இரண்டு இலட்சத்திற்கு என்ன செய்வது ? எங்கள் நகைகள் அத்தனையையும் விற்றாலும் இருபதி னாயிரம் கூடப் பெறாதே" என்றாள் கவலையுடன்.

"உனக்கென்று ஒரு நகை கூட நான் வாங்கித் தரவில்லையே ! நீ கொண்டு வந்ததைக் கூட விற்று ஏப்பம் விட்டாகிவிட்டது. ஒரு சங்கிலியும் , இரண்டு காப்பும் தான் மிச்சம். "

"தாலிக்கொடியிருக்கே " என்றாள் துளசி.

அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டே, " எள்ளோடு சேர்த்து எலிப்புளுக்கை காய்வது போன்று, என்னைக் கட்டிக் கொண்டு நீயும் கவலைப்படவேண்டியிருக்கின்றது. " என்றான் சிவா.

"இராமன் தரையிலே படுத்தாலென்ன ? முள்ளிலே படுத்தாலென்ன? அவன் படுக்குமிடம் தான் சீதைக்குப் பஞ்சு மெத்தை" என்றாள் துளசி.

" நாளைக்கு சுகுவிடமும், கோமதியிடமும் இது பற்றிக் கதைப்பது டன் ரமணிக்கு ஒரு கடிதமும் போடுவோம். அவன் ஒரு லட்சம் அனுப்பினால், மிகுதியை நாங்கள் இங்கு மாறிச் சமாளிக்கலாம். "

www.padippakam.com



"ரமணி டென்மார்க் போய் இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. பயணச் செலவிற்கு அடகு வைத்த நகைகளை மீட்கும் வரை கடிதம் போட்டான். காசும் அனுப்பி வைத்தான். அதன் பின் ஒரு கடிதமு மில்லை. மாமா, மாமிக்குக் கூடக் காசு அனுப்புவதில்லை" என்றாள் துளசி.
கோமதிக்கு அவன் கடிதம் எழுதுகிறவன். எங்களுக்கு ஏன் எழுது வதில்லையென்று தெரியவில்லை. ஆனால் ஒவ்வோர் கடிதத்திலும் எல்லோர் சுகங்களையும் கேட்டு எழுதுகிறவன் என்று கோமதி சொன்னாள்." என்றான் சிவா.
"எல்லோரும் கண்ணுக்கு முன் இருக்கும் வரை தான் பாசமும் நேசமும். தங்களுக்கென்று வசதியும் வாழ்க்கையும் வரும்போது அண்ணன் அண்ணி, ஏன் அம்மா அப்பாவையே தள்ளி வைத்து விடுவார்கள்."
"அப்படிச் சொல்லாதே. அவன் அந்தக் குளிர்நாட்டிலே என்ன கஷ்டப்படுகிறானோ? சமையல் சாப்பாடு எப்படியோ ? கடவுள்தான் அவனைக் காப்பாற்றவேண்டும்." என்றான் சிவா. , தலைமாட்டில் இருந்த ரோச் லைற்றை அம த்தி அருகே கிடந்த மேசை மணிக் கூட்டில் நேரத்தைப் பார்த்துவிட்டு,
"மூன்று பத்தாகிவிட்டது. கொஞ்சம் நித்திரை கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்திலே கண்ணைச் சுழற்றும்" என்று விட்டு மறுபக்கம் திரும்பிப் படுத்தான்.
துளசியும் சிறிது நேரம் ஏதேதோ யோசித்துவிட்டு, பின் சோம்பல் மிகுதியால் தன்னையறியாமலேயே தூங்கிவிட்டாள்.
மறுநாள் பாடசாலையிலேயே தம்பி ரமணிக்கு விபரங்களை எழுதி , இடைவேளை நேரம் தபாற்கந்தோருக்குச் சென்று, கடிதத்தை தபாலில் சேர்த்தான். வேலை முடிந்து வீடு வந்ததும், தம்பி சுகுவி டம் பஸ் ஏறி யாழ்ப்பாணம் புறப்பட்டான் சிவா.
சுகு, சுமணாவின் பழக்கம் ஏற்படும் வரை தினமும் வேலைக்கு வீட்டிலிருந்தே பஸ்ஸில் போய் வருவான். போக்குவரத்துச் செல வும், பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் நேரமும் வீண் என்று கூறி, சுமணாவின் அறிமுகம் ஏற்பட்டபின், அவள் வீடு யாழ்ப்பாணத்தி லேயே இருப்பதால் அங்கு ஒரு அறையில் வேலை நாட்களில் தங்கிவிட்டு, லீவு நாட்களில் மட்டும் வீட்டிற்கு வருவான். அவன் வரும்வரை பொறுத்திருக்கமுடியாது என்று கருதி சிவா அவனிடம் சொல்லி காசு ஒழுங்கு செய்வதற்காகப் புறப்பட்டான்.
சிவா கூறிய விடயத்தைக்கேட்டு சுகு கவலைப்பட்டான். எனினும் கை கொடுத்து உதவ அவன் நிலை இடந்தரவில்லை.
"அண்ணா ஒரு தங்கைக்குக் கடன் வாங்கிக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கின்றோம். ரமணி சீதனக்காசு அனுப்பியிருந்தாலும், பத்தாயிரம் ரூபா நான் மாறிச் செலவழித்திருக்கிறன். இனி என் னாலை எங்கள் குடும்பத்துக்கென்று ஒரு ரூபா கூட ஒதுக்கமுடி யாது."
அது கேட்டு பேயறைந்தது போல் நின்றான் சிவா. அவன் நாடி நரம்புகளெல்லாம் வெந்தன.
" நாங்கள் ஐந்து பேரும் பஞ்சபாண்டவர் போல ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று அப்பா அடிக்கடி சொன்னதை நீ மறந்திருக்

படிப்பகம்

www.padippakam.com



கமாட்டாயென்று நினைக்கிறன். ஒருவருக்குத் துன்பம் என்றால் , மற்ற நால்வரும் சேர்ந்து அதைப் போக்க முயலவேண்டும். "

" அதற்காக நான் என்ன செய்ய முடியும்? அளவிற்கு அதிகமாகக் கடனைப்பட்டு விட்டுத் தெருவிலே நிற்கச் சொல்லுகிறீர்களா ?"

"சுகு !" என்று அவனை உரப்பிவிட்டு, தன் தலையை இருதரம் ஆட்டி உள்ளத்திலெழுந்த சினத்தைத் தணித்துக் கொண்டு,

நீ வேலைக்குச் சேர்ந்து இன்னும் முழுதாக ஒரு வருடம் ஆக வில்லை. உனக்கென்ன வயதா போய்விட்டது ? ஐந்தாறு வருடங்க ளுக்குப் பிறகு கல்யாணம் செய்யலாம். அதுவரை உழைத்து குடும்பக் கடமைகளைச் செய்வதுடன், உனக்கும் கொஞ்சம் சேமிக்கலாம். பத்தாயிரம் கடனைப் பற்றி பயப்படாதே. அது மாதாமாதம் சம்பளத் தில் கழிபட்டு நான்கைந்து வருடங்களில் முடிந்து விடும். இப்படி எத்தனையோ தடவைகள் நானும் கடன் எடுத்துக் கட்டியிருக்கிறன். "

"இவ்வளவு இலகுவாக கடனைப் பற்றியும், கல்யாணத்தைப் பற்றியும் சொல்லிவிட்டீங்கள். ஆனால் நீங்கள் நினைப்பது போல அப்படிச் சுலபமானதல்ல இவை. சுமணாவின் அப்பா கல்யாணத்தை கெதியா செய்யச் சொல்லி ஒவ்வொரு நாளும் கேட்டுக் கொண்டே இருக்கின் றார். நீங்கள் சொன்னது போன்று ஐந்தாறு வருடங்களல்ல; ஐந்தாறு மாதங்களே கல்யாணத்தைப் பின்போட முடியாது. "

" ஓ ! அப்படியா?" சிவாவால் தம்பியின் வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை. தன்னைச் சமாளிக்கவே சில விநாடிகள் அவனுக் குத் தேவைப்பட்டன.

"நீங்கள் என்னைப் படிப்பித்து விட்டது உண்மை. அதற்காக இலட் சக்கணக்கில் உங்களுக்குத் திருப்பித்தர என்னால் முடியாது. என்னால் மட்டுமல்ல , எந்தத் தம்பிகளாலுமே முடியாது. "

"அப்படிச் சொல்லாதே ! உன்னால் முடியாதென்று சொல். எந்தத் தம்பிகளாலுமே முடியாதென்று சொல்லாதே. தங்கள் குடும்பங்களுக் காகத் தங் களையே தியாகம் செய்த எத்தனையோ தம்பிகளை எனக்குத் தெரியும். " என்று விட்டு சிவா, வீட்டிற்குத் திரும்பினான்.

சுகு சொன்ன வார்த்தைகளை நினைக்கும் தோறும் அவன் நெஞ்சு உலைக்களம் போல் அனலைக் கக்கியது.

கோமதியிடம் அவன் , இரண்டு இலட்சம் மாதவன் சீதனமாகக் கேட்கிறான் என்று சொல்லவோ, உதவி கேட்கவோ போகவில்லை. முதலில் தங்கை தானே வசதியாக இருக்கிறாள் கேட்கலாமென்று எண்ணினான். ஆனால், பின் அவளால் தான் இந்தப் புயலே எழுந்தது. முதன் முதல் அவள் தான் என் சொல்லை மீறினாள். முடிந்தால் உதவி செய்யுங்கோ; இல்லாவிட்டால் ஒதுங்கி வழிவிடுங் கோ.. என்றாள்.

காதல் வெறியாலும், நிரந்தர வேலையிருக்கு என்றதலைக்கனத்தா லும் அண்ணை என்று கூடப் பார்க்காமல் , எதிர்த்து விட்டு போனவள். அவளிடம் இதைக் கூறுவது புறக்குடத்தில் தண்ணீர் ஊற்றுவது போலத் தான் இருக்கும் என்று நினைத்தவனாய், அத் தோடு சகோதரர்களிடம் உதவி கேட்பதை நிறுத்திவிட்டு, வீடு வளவை விற்கும் முடிவிற்கு வந்தான்.

அப்பா கனகரின் பேரிலேயே வீடுவளவு இருந்ததால் எந்தச் சிக்கலு மின்றி விற்க வசதியாக இருந்தது. மூன்று இலட்சம் மதிப்புப்

www.padippakam.com



போட்ட போதும் அந்த நேரம் அவசரத்தில் ஒன்றரை இலட்சத்திற்கு வீடு விற்கப்பட்டது. மிகுதி ஐம்பதினாயிரம் உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்கி மொத்தம் இரண்டு இலட்சத்தையும் மாதவன் கையில் கொடுத்து, "இந்தா சீதனம். இந்தப் பூமியில் மனிதனாகப் பிறக்கக் கூடாது; அப்படிப் பிறந்தாலும் பெண்களோடு பிறக்கக்கூடாது; அதுவும் அண்ணனாகப் பிறக்கக்கூடாது. இது என் அனுபவத்தில் கண்டது. நீங்கள் நல்லா இருங்கோ" என்று விட்டுத் திரும்பினான்.
மூன்று மாதங்களுக்குள் வீட்டைக் காலி பண்ணித் தரும்படி கூறினார் வீட்டை வாங்கியவர்.
மாதவன் மாலினியைக் கூட்டிக் கொண்டு தன் தாய் வீட்டிற்குப் போய்விட்டான்.
சிவா வீடொன்றை வாடகைக்கு எடுத்து, மனைவியுடனும், தாய் தந்தையுடனும் குடியேறினான்.
ஐம்பதினாயிரம் கடன் வட்டியும், குட்டியும் போடத் தொடங்கிற்று. துளசியின் கழுத்திலிருந்த நகைகளும், கண்ணகி அம்மாவிடமிருந்த நகைகளும் விற்று வட்டியைக் கொடுக்க முடிந்ததே தவிர, முதலைக் குறைக்க முடியவில்லை.
மாலினிக்கு இரட்டைக்குழந்தைகள் பிறந்தன. இரண்டும் ஆண்பிள் ளைகள்.
கோமதியும் கருவுற்றாள். உதவிக்கு வேண்டுமென்று தாயையும் தகப்பனையும் தன் வீட்டிற்குக் கூட்டிச் சென்றுவிட்டாள். ஆண்குழந் தையும் பிறந்தது. அதற்குப் பின்பும் தாய், தகப்பனை , "அண்ணை கஷ்டப்படுகிறார். நீங்கள் இங்கேயே இருங்கோ" என்று தன்னுட னேயே வைத்துக் கொண்டாள்.
சுகுவிற்கும் சுமணாவிற்கும் திருமணம் நடந்தது. சிவாவும், துளசியும் கடமைக்காக ஒரு மூலையில் போய் இருந்துவிட்டு வந்தார்கள். எண்ணி மூன்று மாதங்கள் சுகுவும் அப்பாவாகப் போகிறான் என்ப தைச் சுமணா வாந்தியெடுத்து நிரூபித்தாள்.
சிவா, தினமும் பாடசாலையால் வேலை முடிந்து வந்ததும் தான் விற்றுவிட்ட தங்கள் வீட்டையும், நிலத்தையும் சென்று பார்த்து விட்டே வீட்டிற்குத் திரும்புவான். அன்றும் வேலை முடிந்து தங்கள் பழைய வீட்டை நோக்கிச் சென்றான். அதனை யரோ ஒருவருக்குச் சொந்தமென்று நினைக்கவே அவனால் முடியவில்லை.
" நான் பிறந்து வளர்ந்த இந்த மண் இன்னொருவன் கைக்குப் போவதா ? என் தம்பி, தங்கைகளுடன் இம்மண்ணில் எத்தனை விளையாட்டுக்கள் விளையாடியிருப்பேன். எத்தனை மரங்கள், எத்தனை மலர்கள், எத்தனை வண்ணங்கள், இத்தனை இயற்கை வளங்கொழிக்கும் இந்நிலத்தை , என் தாய்வழி வந்த சொத்தை மாற்றானுக்கு விற்று விட்டு, நான் உரிமையிழப்பதா ? முடியாது ! ஒரு நாளும் முடியாது ! என்னவானாலும் ஆகட்டும். இந்த அன்னை பூமியை மீட்டே தீருவேன்" என்று ஆவேசத்துடன் சபதமெடுத்தான் சிவா.
வீதியோரத்தில் சைக்கிளை நிறுத்தி, அதன் பாரில் சாய்ந்தவாறு நேரம் போவது தெரியாமல் தான் பிறந்து வளர்ந்த வீட்டையும், தான் ஏறி விளையாடியதும், பழங்கள் பறித்து உண்டதுமான மாமரங்களை யும் பார்த்துக் கண்ணீர் சொரிவான்.

படிப்பகம்

www.padippakam.com



அவன் சகோதரங்களின் நினைவு வரும்.
"அண்ணா ! என்று என்னைச் சுற்றிச் சுற்றி வந்த என் தம்பிகளும், தங்கைகளும் எப்படியெல்லாம் மாறிவிட்டார்கள். பல்துலக்கி, தண்ணீர் அள்ளிக் கொடுத்து, குளிக்க வார்த்து, சட்டைபோட்டு, சாப்பாடு ஊட்டி, பள்ளிவரை கூட்டிச் சென்று.. அவன் கண்கள் மீண்டும் ஆறாகக் கண்ணீரைச் சொரிந்தன. இனியும் அங்கு நின் றால் நெஞ்சு வீங்கி வெடித்து விடும் போலிருந்ததால் மெதுவாகச் சைக்கிளில் ஏறி வீட்டை நோக்கிச் சென்றான்.
அங்கே, துளசி அவனை நீண்டநேரமாக எதிர்பார்த்து, பள்ளிக்கூடம் முடிந்து இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே அவர் எங்கே போய்விட் டார்? வருகின்ற வழியிலே ஏதாவது நடந்துவிட்டதா என்று ஏக்கத் துடன் வழியை வழி பார்த்துக் கவலையுடன் நின்றவள் சிவா வருவ தைக் கண்டதும், அத்தனை கவலையும் கோபப் புயலாக மாறி அவனைப் பார்த்துத் சீறினாள்.
"எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?"
"வீட்டைப் பார்க்கப் போயிருந்தன்." என்று பதில் கூறிய சிவாவின் கண்கள், துளிசியின் சினங் கொண்ட கேள்வியை விரும்பாதவனாக அவளைக் குத்துவன போல் விழித்தன.
" என்ன பாக்கிறீங்கள்? உங்களுக்காக எவ்வளவு நேரம் நான் பார்த்துக் கொண்டிருப்பது ? எத்தனை மணி என்று பாருங்கோ."
" உனக்குத் தெரியும் தானே நான் எங்கு போயிருப்பன் என்பது."
" எனக்குத் தெரியுமோ ?" என்று முகத்தை நெளித்த துளசி, "அங்கே உங்களுக்கென்ன வேண்டியிருக்கு? வீடு வளவை அடுத்தவனுக்கு விற்றுப் போட்டு, அதைப் போய்த் தினமும் பார்த்து என்ன கொட் டாவி விடுகிறிங்களா? என்றாள் கோபத்தோடு.
சிவா, ஏற்கனவே வீடு விற்ற கவலைகள் நெஞ்சை வாட்ட வீட்டிற்கு வந்தவன், அங்கு துளசியின் அர்த்தமற்ற கோபத்தையும், அதட்டிக் கேட்ட கேள்விகளையும் கண்டுவீறுகொண்ட யானை போலானான்.
சைக்கிளை ஒருபுறம் தள்ளி எறிந்துவிட்டு ,துளசியின் தலைமயிரைக் கோதிப்பிடித்து, அவளை வீட்டிற்குள் தள்ளிக் கொண்டு போனான்.
அவள் கத்தினாள், கதறினாள், சினங்கொண்டு திட்டினாள். அவன் தலைமயிரைப் பிடித்த பிடியைத் தளர்த்திவிட்டு ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான்.
அடி நொந்ததோ, இல்லையோ இடி விழுந்தது போல தரையில் வீழ்ந்து துடித்தாள் துளசி.
அதனைப் பார்க்க சிவாவின் நெஞ்சு இளகியது. பொங்கியெழுந்த கோபமெல்லாம் எங்கோ ஒரு மூலையில் சென்று ஒதுங்கியது. வெறி கொண்ட யானை போல நடந்து கொண்டவன், இப்போ சாதுவான பசுவாகி அவள் கண்ணீரைத் துடைக்க அவள் பக்கம் நடந்தான்.
"நில்லுங்கோ !" என்று அதட்டினாள் துளசி. அவன் நின்றான்.
" என்னை என்ன பொண்டாட்டி என்று நினைத்துத் தாலி கட்டினீங் களா ? அல்லது வேலைக்காரியென்று நினைத்துத் தாலி கட்டினீங் களா ?"
ஏன் இப்பிடிக் கேட்கிறாய் ? உனக்கு நான் என் குறை வைச்ச னான். "

www.padippakam.com



" என்ன குறை வைத்துவிட்டீர்களா? இப்படிக் கேட்பதை விட மனைவி என்ற ரீதியில் எனக்கு நீங்கள் என்னென்ன செய்திருக்கிறீங் கள் என்று சொன்னால் இலகுவாக இருக்கும். "
" ஊரில் இருக்கின்ற மற்றப் பெண்களை விட உனக்கு என்ன வசதிக்குறைவு?"
"அறிவில்லாதவர்கள் போலக் கேள்வி கேட்காதேங்கோ ! கல்யாணம் செய்து ஐந்து வருடங்களிற்கு மேலே எங்களுக்கென்று ஒரு பிள்ளை பெற்றறோமா ? தம்பிகள் படிக்கட்டும். தங்கைகள் கல்யாணம் கட்டட்டும். என்றீர்கள். இப்போ ஒரு தம்பி டென்மார்க் போய் வருடக்கணக்காகிறது. ஒரு கடிதம் உங்களுக்கு எழுதியிருக்கிறானா ? கடனுக்கு கடன் என்று பயணம் போவதற்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தான். அத்துடன் அவன் கடமையெல்லாம் முடிந் துவிட்டது என்று ஒதுங்கிவிட்டான். பெரியதம்பி சுகு பட்டதாரியாகி வந்தவுடன் உங்கள் குடும்பத்திற்கு பெரிதாக கிழித்து விடுவான் என்றீங்க; அவனோ பட்டத்தை வாங்கி, வேலையும் பெற்று, பணக்கார வீட்டு மருமகனாகி, பிள்ளையும் வேறு பெற்றுக்கொள்ளப் போகிறான். தங்கச்சிமாருக்கு அண்ணை என்றால் உயிர் என்றீர்கள்; அவர்களோ ஒற்றைக்காலில் நின்று அண்ணைமாரிடம் இரண்டு இலட்சம் நறுக்காகக் கறந்துவிட்டு, தாங்கள் தங்கள் குடும்பம் என்று ஒதுங்கி விட்டார்கள். இனியாவது நாங்கள் எங்களுக்கென்று ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளலாமென்றால், இன்னும் பொறு, வீடுவளவை மீட்டபின்பு தான் பிள்ளை பெறுவது என்கிறீர்கள். ஊரில் எல்லோரும் மலடி என்று நெளிக்கிறார்கள். என்ன அறிவே இல்லையா? என்னை என்ன மரமோ மட்டையோ என்று நினைத்துக் கல்யாணம் கட்டினீங் களோ? என்று துளசியின் வார்த்தைகளில் ஆவேசமும், அழுகையும் நுரை கக்கியது.
அவள் சொல்வதில் நியாயம் இருப்பது சிவாவிற்குத் தெரிந்தபோதும் தன் சகோதரங்கள், தன் கடமைகளை அவனால் விட்டுக் கொடுக்க முடியவில்லை.
" எங்கள் பரம்பரைச் சொத்தான அந்த வீட்டையும், நிலத்தையும் திரும்ப வாங்குமட்டும் எனக்கென்று என்னால் வாழமுடியாது".
"இப்படிக் கொத்த நீங்கள் திருமணமே செய்யாமல் இருந்திருக்க லாம்" "இப்ப நீ என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" "இல்லை; உங்கள் கடமைகளை நீங்கள் செய்யுங்கோ ! அதுவரை நான் அப்பா, அம்மாவுடன் போய் இருக்கப் போகின்றேன்" என்றாள் துளசி வார்த் தைகளில் உறுதிபட.
அது கேட்ட சிவாவின் இதயம் திக்கென்றது. நாடி நரம்புகள் அதிர்ந் தன. முகத்தில் துக்கம் ததும்பியது. கண்கள் இமைக்க மறந்து வேதனை நிறைய அவளைப் பார்த்தன. சில நிமிட மௌனத்தின் பின் அடைத்துக் கொண்ட தொண்டையை செருமிச் சரிப்படுத்திய சிவா. "உனக்கு அடித்து விட்டேனென்ற கோபத்தில் என்னை விட்டுப் போக முடிவெடுத்துவிட்டாயா ? துளசி, விற்று விட்ட நிலத்தையும் வீட்டையும் பார்த்துவிட்டுத் துக்கத்துடன் வந்த எனக்கு, நீ எதிர்த்துக் கேள்வி கேட்டதும், என்னையறியாமலே கோபத்தில் உனக்கு அடித்து வேதனைப்படுத்திவிட்டேன். என்னை

படிப்பகம்

www.padippakam.com



மன்னித்து விடு. இனிமேல் இப்படி ஒரு நாளும் நடக்காத ’ என்றான்.
”சீ.. சீ.. அதொன்றும் எனக்குக் கோபமில்லை. உங்கள் கடமைக்கு நான் இடைஞ்சலாக இருக்க விரும்பவில்லை. நீங்கள் வீடு வளவை மீண்டும் வாங்கி, உங்கள் அப்பா, அம்மா சகோதரங்களிற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டுச் சொல்லுங்கோ நான் வருகிறேன். அதுவரை நாங்கள் பிரிந்திருப்பதே நல்லது.” என்ற துளசி தனது உடுப்புக்களை பெட்டி ஒன்றிற்குள் எடுத்து அடுக்கத் தொடங்கினாள்.
”துளசி ! வேண்டாம் இந்த விஷப்பரீட்சை. உன்னைப் பிரிந்து என்னால் வாழமுடியாது. இவ்வளவு நாளும் என் கடமைகளைச் செய்ய உறுதுணையாக நின்ற நீ இப்போ என்னை விட்டு விட்டு ஓடிப் போவது நியாயமா ?
”இந்த நிலம் எங்கள் பரம்பரைச் சொத்து. இது அந்நியன் கையிலிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. எப்படியாவது உழைத்து அதனை மீட்டு விட்டு, நாங்களும் எல்லோரும் போல பிள்ளை குட்டிகள் பெற்றுச் சந்தோஷமாக இருப்போம். அதுவரை பொறுத்திரு. என்னைவிட்டுப் போக நினைக்காதே !” என்று கண்கள் கலங்க , நா தழுதழுக்க தடுத்துக் பார்த்தான் சிவா.
” உங்களுக்குக் கிடைக்கின்ற சம்பளத்தில் பட்ட கடனுக்கு வட்டி கட்டுவதே சிரமமாக இருக்கின்றது. அப்படியான நிலையில் அந்தக் கடனைக் கொடுத்து முடித்து மேலும் இரண்டு இலட்சமோ அல்லது அதற்கு மேலோ சேர்த்து வீடு வளவு திரும்ப வாங்குவதானால் பல ஆண்டுகளாகும்; அதுவரை நான் உயிருடன் இருந்தால் மீண்டும் சேர்வோம். முடிந்தால் பிள்ளையும் பெறுவோம்”. என்று விட்டு , பெட்டியைத் தூக்கிக் கொண்டு தனது பிறந்த வீட்டிற்கு நடந்தாள். அவளை இயன்றவரை தடுத்து பார்த்து. இயலாமற் போகவே அவளிற்கு வேதனையுடன் விடை கொடுத்தனுப்பினான் சிவா.

T.T.S
Brotherers
தங்க நகைகள் முதல் தரமான
அனைத்துப் பொருட்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
GARTEN STR 29,
4400 MUNSTER, GERMANY.
Tel: 0251/2301184 Fax: 0251/2301183

www.padippakam.com



# 2

ஒரு தேன் கூடு இடிந்துவிட்டது. அதிலிருந்த தேனீக்களெல்லாம் பறந்துவிட்டன. ஒரு தேனீ மட்டும் பழைய கூடு இருந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. இடிந்து போன கூட்டை மீண்டும் கட்டி, பறந்து போன தேனீக்களை மீண்டும் அழைத்து வந்து குடியிருக்க வேண்டுமென்று கனவு கண்டது. அந்தத் தேனீயின் நிலையில் தான் சிவாவும் இருந்தான்.

பெற்றோர், சகோதரங்கள், மனைவி எத்தனை சந்தோஷமாக இருந்தது அந்தக் குடும்பம். இப்போ ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் . தோப்பிலிருந்த மாமரம் ஒன்று தனி மரமாக்கப்பட்டது போல் நின்றான் சிவா. தனிமை அவன் உள்ளத்தை அரித்தது. கடன்காரன் தினமும் வந்து அவனுக்குத் தொல்லை கொடுத்தான். நிம்மதியின்றித் துடித்தான் அவன். யோசனைகள் அவன் நித்திரையைக் கெடுத்தன. பல இரவுகள் கண்ணீருடன் படுத்திருந்தான். நித்திரையை வருந்தி அவன் அழைத்தபோதும், அதுஅவனை அணுகமாட்டேன் என்றுவிட்டது. எப்பாலும் இருந்துவிட்டு ஓரிரு கணங்கள் நித்திரை அணுகினாலும் அவனைப் பயங்கரக்கனவுகள் வந்து அறுத்தன. அவன் விழித்திருக்கும்போதும், படுத்திருக்கும் போதும் அழுதான். பசி அவன் கண்களைப் பஞ்சடைய செய்தது. சமையல் செய்து பார்ப்பான். சாப்பிடவும் தொடங்குவான். பின்பு விழுங்கும்போது துக்கம் தொண்டையையடைக்கும்.

அவன் உடம்பும் நரம்புகளும் பலவீனமடைந்திருந்தன. சம்பள லீவும் முடிந்து, ஒரு மாதம் சம்பளமில்லாத லீவும் எடுத்தபின் இனியும் வேலைக்குப் போகாமலிருந்தால் வேலைபறி போய் விடுமென்ற அச்சத்தில் பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்தான்.

மாணவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும் சிவாவிற்கு நல்ல மதிப்பிருந்தது. விளங்காத பாடங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு நல்ல உதாரணங்கள் சொல்லி எளிதில் புரிய வைப்பான். இதனால் மாணவர்களுக்கு அவனிடம் ஓர் அலாதியான அன்பு.

பாடசாலை விளையாட்டுப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, கிரிக்கட் ஆட்டமென்று வந்துவிட்டால் உடற்பயிற்சி ஆசிரியருடன் சிவாவும் நின்று பயிற்சி கொடுப்பான். அவன் மாணவனாக இருக்கும் போது விளையாட்டுக்களில் முன்னணி வீரனாகத் திகழ்ந்தவனாதலால் விளையாட்டுத் துறைகளில் மாணவர்களை மிகுந்த உற்சாகத்துடன் ஊக்குவிப்பான். சாதாரண நாட்களில் உடற்பயிற்சியில் ஆர்வமுள்ள மாணவர்களை பாடசாலை முடிந்த பிற்பாடு அரைமணிநேரம் விளையாட்டு மைதானத்தை சுற்றி ஓடுதல், பாரம் தூக்குதல், கயிறடித்தல் போன்ற பயிற்சிகள் கொடுப்பதுடன் தானும் அவர்களுடன் ஒருவனாக நின்று பயிற்சி செய்வான். அப்போ அவ

www.padippakam.com



னுக்குப் பழைய நினைவுகள் அடிக்கடி எழும். தான் பங்குபற்றும் போட்டிகளில் எல்லாம் ரமேஸ் பங்குபற்றுவதும், இருவரும் மாறி மாறி முதலாம், இரண்டாம் இடத்திற்கு வருவதும், மரதன் ஓட்டத்தில் மட்டும் என்றும் தானே முதலிடத்தைப் பெறுவதும் அவன் நெஞ்சத்து நினைவுகளில் திரைப்படமாக வந்து போகும்.

உயர்தர மாணவர்களிற்கு இறுதிப்பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்ததால் சிவா தன் நெஞ்சப் போராட்டங்களை அடக்கிக் கொண்டு, பாடங்களை விரைந்து படிப்பிப்பதில் அதிக கவனத்தை செலுத்தினான்.

இன்று வரை அவன் மாணவர்களிற்கு ஓங்கி ஒரு அடி அடித்தறியான். அவர்கள் தவறிழைத்தால் வாயால் கண்டிப்பது, முறைத்துப் பார்ப்பது, கை ஓங்குவது அத்துடன் நிறுத்தி விடுவான். ஆனால் தற்போது சில நாட்களாக மாணவர்கள் ஒரு சிறு தவறு விட்டாலும் கையில் அகப்பட்டதால் காது, கன்னமென்று பார்க்காமல் அடித்து விடுவான். இது மாணவர்களுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. ஆசிரியர்களிற்கும் தெரிய வந்தது.

ஒரு நாள் இரு மாணவர்கள் வகுப்பறைக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போ தான் வெளியே இருந்து உள்ளே வந்த சிவா, மேசையில் கிடந்த பிரம்பால் இரு மாணவர்களிற்கும் தாறுமாறாக அடித்து விட்டான். மறுநாள் இரு மாணவர்களும் பள்ளிக்கூடம் வரவில்லை. பிரம்பால் சிவா அடித்த இருவருக்கும் காயத்தை ஏற்படுத்திவிட்டதால் டாக்டரிடம் போக வைத்ததென்பது தெரிய வந்தது.

சில நாட்களின் பின் கல்வி அதிகாரியிடமிருந்து வந்த கடிதத்தின் பிரகாரம்,, அதிபர் சிவாவைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்திவிட்டார்.

சிவாவிற்கு பைத்தியம் பிடியாத குறை. இன்னும் சில நாட்கள் இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் அதுவும் பிடித்து விடுமென்ற நிலை. கோவிலிற்குப் போய் வந்தால் சிறிது நிம்மதியேற்படும் என்று தினமும் ஒரு தடவை போய் வரத் தொடங்கினான்.

வீட்டுக்காரன் வாடகை கொடு என்று வந்து நின்றான். கடன் கொடுத்தவன் வட்டி எங்கே ? என்று தொல்லை கொடுத்தான். சிவாவோ கறி சாமான் வாங்கக் காசின்றிப் பட்டினி கிடந்தான்.

"அன்பிற்கு அடிமையானவன் நான். என் கடமையைச் செய்யத்தானே துடித்தேன். என்னை ஏன் கடவுளே இப்படித் தண்டிக்கின்றாய் ? சமர்த்தான சகோதரங்களைக் கொடுத்தாய், மனதிற்குப் பிடித்த மனைவியைக் கொடுத்தாய் சோதனையென்று எனக்கு வந்தபோது எல்லோரையும் என்னை அணுகவிடாது பிரித்துவிட்டாயே கடவுளே !" அவன் நெஞ்சு கலங்க, கண்கள் கண்ணீரால் குளிக்க கடவுளிடம் கூறிக் கதறுவான்.

ஒரு நாள் துளசியின் அப்பா வந்தார்.

" மாப்பிள்ளை ! நீங்கள் படித்தனீங்கள். உங்களுக்கு நான் புத்தி சொல்ல முடியுமா ? ஏன் இப்படி நீங்களும், அவளும் பிரிந்திருக்கிறீங்கள்? எத்தனை காலத்திற்கு இப்படி ? வாங்கோ அவளோடு மனம் விட்டுப் பேசி வேற்றுமையை மறந்து ஒற்றுமையாக வாழப்பாருங்கோ.

படிப்பகம்

www.padippakam.com



அத்துடன், உங்கள் கஷ்டங்களையெல்லாம் கேள்விப்பட்டேன். நீங்கள் பட்ட கடனை வட்டியோடு கொடுக்க நான் பணம் தருகின் றேன். துளசிக்கு நான் முன்பு சீதனம் கொடுக்க, நீங்கள் வாங்க மறுத்துவிட்டீங்கள். இப்போ தருகிறேன். வாங்கிக் கடனைக் கொடுத் துவிட்டு நீங்களும் துளசியும் சந்தோஷமாக இருங்கோ. விற்றவீடு போகட்டும். பிறகு வசதி வரும்போது, புது வீடு கட்டலாம். இப்போ எங்கள் வீட்டிலே வந்து தங்கலாம் வாங்கோ." என்றார்.
சிவா அவர் சொல்வதைச் செவி மடித்துவிட்டு,
" நான் வாழ்க்கையின் விளிம்பில் நிற்பதால், பணத்தைக் காட்டி , என் இலட்சியத்தையும், கடமையையும் மறக்க வைக்கலாமென்று நினைக்கிறீங்களா ?" என்றான்.
"நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீங்கள். துளசியும், நீங்களும் ஒருவர் மேல் ஒருவர் எவ்வளவிற்கு அன்பு வைத்திருக்கி றீங்கள் என்று எனக்குத் தெரியும். இந்த ,இளம் வயது , ஒருவருக் கொருவர் ஒத்தாசையாக இருக்கவேண்டிய நேரத்தில், தூரத்தூர அர்த்தமின்றிப் பிரிந்திருக்கிறீர்களே ! வாழாவெட்டியாக மகளை வீட்டில் வைத்துக் கொண்டு என்னால் எப்படித் தம்பி சந்தோஷமாக இருக்க முடியும் ? என்ற துளசியின் அப்பாவுடைய கண்கள் லேசாகக் கலங்கின. அதனைக் கவனித்த சிவா.
" சீ ! என்ன மாமா இதற்கெல்லாம் பெரிதாக யோசிக்கிறீர்கள்? துளசி தானாகத் தான் என்னை விட்டுப் போனாள். அவள் திரும்பி வந் தால் நான் என்ன வேண்டாமென்றா சொல்லப் போகிறன் ? மாமா ! எங்கள் வீட்டையும், நிலத்தையும் இன்னொருவன் ஆள்வதை என்னால் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. அது மீண்டும் எங்கள் குடும்பத்தின் பெயரில் மாறும் வரை நான் ஓயமாட்டேன்" என்று வார்த்தைகளில் தெளிவும் உறுதியும் படக் கூறினான். அதன் பின் துளசியின் அப்பா, 'புலி பசித்ததலும் புல் தின்னாது ' என்று நினைத் துக் கொண்டவராய்,
"நீங்கள் எந்த நேரமும் எங்கள் வீட்டிற்கு வரலாம். உங்களுக்காக எங்கள் கதவு என்றும் திறந்தேயிருக்கும்" என்று விட்டுப் புறப்பட் டார்.
சில நாட்கள் சென்றன.
'தற்கொலை செய்தாலென்ன ? ' என்று சிவாவிற்கு எண்ணம் எழுந் தது.
'யாரிற்காக இந்த உலகத்தில் வாழவேண்டும் ? ஒரு காலத்தில் அப்பா, அம்மா, சகோதரங்கள், மனைவி எல்லோரும் என்னை நம்பி இருந்தார்கள். அவர்களுக்காக வாழவேண்டியிருந்தது. இன்று என்னை நம்பித்தான் யாருமேயில்லையே !
' பொய்யானது இந்த உலகம்; நீர்க்குமிழி மனித வாழ்க்கை. இதற்குள் இலட்சியமும் மண்ணாங்கட்டியும், நான் யார் இவ்வுலகத்தில் ? எத்தனையோ நட்சத்திரங்களுக்குள், ஒரு சிறிய சூரிய குடும்பத்தில், ஒரு சிறிய கோளான பூமியில், ஓர் சிறிய தீவான இலங்கையில், ஓர் சிறிய யாழ்ப்பாணத்தில் , ஒரு சிறிய ஊரில், ஒரு சிறிய தெருவில், ஒரு சிறிய வீட்டில் அதுவும் வாடகைக்கு இருக்கும் ஒரு மனிதன். நான் வாழ்வதால் இந்த உலகம் சந்தோஷப்படப் போகிறதா ? அல்லது நான் இறந்துவிட்டேனென்று அழப்போகிறதா ? எல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



வெறும் கானல் நீரே ' என்று விரக்தியுடன், பக்கத்து விவசாயக் கடை ஒன்றில் பொலிடோலை வாங்கி, வீட்டில் வைத்து விட்டு அப்பாவும் அம்மாவும், எந்தப் பாவமும் அறியாதவர்கள். நான் இறந்தால் முதலில் நெஞ்சம் துடிதுடிக்கப் போகிறவர்கள் அவர்கள் தான் என்று நினைத்தவனாய், அவர்களைக் கடைசியாக ஒரு தடவை பார்க்கவேண்டுமென்று ஆசையெழ, தங்கை கோமதி வீட்டிற் குப் புறப்பட்டான்.

சூரியன் மேற்கு வானில் மறைந்து, தனது அன்றைய பயணத்தை நிறைவு வெய்த நேரமது. அவன் கண்களும், நெஞ்சமும் ஒருநாளு மில்லாமல், அந்த மாலைப்பொழுதை, இரவு அரும்பும் வேளையை இரசித்தன. மேலே வானில் நட்சத்திரங்களும், கீழே தெருவிளக்கு களும் கவியும் இருளை விரட்ட என வந்து முடியாமையால் தங்க ளால் இயன்றளவு ஒளியை வழங்கிக் கொண்டிருந்தன. சிவாவின் சைக்கிள் வீதிகளில் அடைக்க அடைக்கப் பிறந்து வரும் கிடங்குக ளில் வீழ்ந்து, வீழ்ந்து, தாவி அவன் வீட்டிலிருந்து பதினான்கு மைல்களுக்கப்பாலிருந்த கோமதி வீட்டையடைந்தது.

சுற்றுமதிலுடன் கூடிய வீடு, மின் விளக்குகள், வீட்டின் அழகையும் வளர்ச்சியையும் காட்டின.

'தங்கச்சி நல்லா இருக்கிறாள். அப்பா, அம்மாவும் என்னுடன் இருந்து பட்டினியுடன் போராடாமல் எப்படியோ சந்தோஷமாக இருக்கிறார்கள்' என்று அவன் நெஞ்சம் குளிர்ந்தது.

நாய் குரைத்தது.

கோமதி வீட்டுக் கதவைத் திறந்தாள்.

சிவாவின் கோலம் அவளைத் திடுக்கிட வைத்தது.

'அண்ணா இந்த ஆண்டிக் கோலத்தில் ?' என்று நினைத்த கோம திக்கு அவனைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது.

சடைத்து, வளர்ந்த தலைமுடியில் சீப்புப்படவில்லை. முகத்தில் முக்காற்பகுதி தாடியும் , மீசையும், பழைய வெள்ளைச் சேட்டில் வேர்வைப் படிவுகளும், ஊத்தைச் சவுடுகளும், அரையில் ஒரு பூச்சிச்சாரம். இடது கால் பெருவிரலில் கல்லடிப்பட்ட காயத்தை மூடி அழுக்கேறிய மருந்துக்கட்டு.

" என்ன இது கோலம் ? அவர் அல்லது மாமி பார்த்தால் காட்டான் குடும்பத்தில் போய் பெண் எடுத்துவிட்டோம் என்று காறித்துப்புவார் கள் போய் உடுப்பு மாற்றி வெளிக்கிட்டு வாங்கோ" என்று அவசரமாக விரட்டினாள்.

" நான் போகிறேன்; அதைச் சொல்லத்தான் வந்தேன். அப்பா, அம்மாவைக்கூப்பிடு. கொஞ்சம் அவர்களைப் பார்க்கவேண்டும். பசியினால் பஞ்சடைந்த நாவால் சரியாகப் பேசமுடியவில்லை வார்த்தைகள் திக்கின. "குடிச்சிருக்கிறியா ?" என்றாள் அவன் நிலைமை புரியாத அவள்.

சோகம் படர்ந்த முகத்துடன் சிரித்த சிவா.

" இனித்தான் குடிக்கப் போகிறேன் " என்றான். " உனக்கென்ன பைத்தியமா அல்லது வெறியா ? எனக்குப் புரியவில்லை. அப்பா,- அம்மா தோட்டத்துக் கொட்டிலுக்குள் இருக்கிறார்கள்" என்று அவனுக்கு வழிகாட்டிவிட்டு, "மாமா மாமி கண்ணில் பட்டு விடாதே எனக்குச் சீலை உரிந்துவிடும்" என்றாள். " உனக்குச் சேலை

படிப்பகம்

www.padippakam.com



கட்டிவிட்ட உன் அண்ணனைப் பார்க்க உனக்கு அவமானமாக இருக்கா ? எல்லாம் இந்த இரவிற்கு மட்டும் தான் தங்கச்சி இந்தக் கோலம். அதற்குப் பிறகு எனக்கு எந்தக் கோலமென்பது கடவுள் தான் நிச்சயிக்கவேண்டும்." என்ற சிவா, கோமதி காட்டிய கொட்டிலை நோக்கி நடந்தான்.

சீ ! அண்ணை இப்படி மாறிவிட்டாரே . அண்ணி விட்டு விட்டுப் போய் விட்டா என்ற சோகத்தில் குடிக்கத் தொடங்கிவிட்டார் போலிருக்கு. இந்த ஆண்களே இப்படித்தான்" என்று தனக்குள் பேசிக்கொண்டே வீட்டிற்குள் சென்று கதவை பூட்டினாள்.

சிவாவைக் கண்ட அம்மா கண்ணகியும், அப்பா கனகரும் அவனை ஆசையுடன் வரவேற்றனர். அவன் கோலத்தைக் கண்டு ஏங்கித் துடித்தனர். உள்ளங் கலங்கி அழுதனர். அது ஒரு சிறிய கொட்டில். தென்னங்கிடுகால் வேயப்பட்டு, தட்டிகளால் சுற்றி மறைக்கப்பட்டிருந்தது. சமையல், சாப்பாடு, படுக்கையெல்லாம் அதற்குள் தான். ஒரு சாக்குக்கட்டில் அது கனகரின் படுக்கை, கீழே பாய்விரித்து கண்ணகி படுப்பாள். 'அழகிய மாளிகைக்குப் பக்கத்தில் சிறிய ஒரு தென்னங்கிடுக் குடிசை. மாளிகையில் மகள், குடிசையிலே பெற்றவர்கள்; என்னடா கடவுளே உன் படைப்பு ?' என்று தனக்குள் கடவுளைக் கேட்டான். இதுவரை அவனுக்கு இந்த நடைமுறை தெரியாது. அப்பாவும் அம்மாவும் கல் வீட்டில் வசதியாக வாழ்கிறார்கள் என்று அவன் கண்ட கனவு இப்போ கண்முன்னே தூள்துளாகிப் பறந்தது.

"சிவா என்ன யோசிக்கிறாய் ? மண் வீட்டில் இருக்கிறோமேயென்றா ? எங்களை விட எத்தனையோ பேர் இது கூட இல்லாமல் தெருவில் இருக்கிறார்கள் தம்பி." என்றாள் அம்மா. அவள் நாவில் துக்கம் கரகரத்தது.

" பஞ்சபாண்டவர்களைப் போல ஐந்து பிள்ளைகளைப் பெற்றிருந்தும் , ஐந்தும் ஐந்து திக்கிலே சிதறிப்போய் நிற்கிறது என்ற கவலையை விட, தருமனை விலக்கி விட்டும் திரௌபதி போய் விட்டாளென்பது தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை " என்றார் கனகர். வேதனை வார்த்தைகளில் தெறிக்க.

" அப்பா, தருமனாக இருக்க நான் என்ன அவதாரமா ? அற்ப மனிதரில் நானும் ஒருவன். என்னை விதி சோதிக்கிறது. அது தான் சகோதரங்கள் என்னைத் தள்ளி வைத்துவிட்டார்கள். மனைவி என்னை மதிக்கவில்லை. எனக்கும் ஒரு காலம் வருமென்று தான் நேற்றுவரை எண்ணியிருந்தேன். ஆனால் இன்று எனக்கு அந்த எண்ணம் அறவே விட்டுப் போய் விட்டது. " அவன் கண்கள் கலங்கின.

அம்மா எழுந்து வந்து அவன் அருகிலிருந்தாள். அவன் கண்களில் தழும்பும் கண்ணீரைக் கண்டதும், அவன் நெஞ்சு எவ்வளவிற்கு கவலைகளைச் சுமந்து கொண்டு நிற்கிறதென்பதை உணர்ந்த அவள், "மகனே ! அவதாரமான தர்மனே பல தடவைகள் அளவிற்கு மீறிய சோதனைகளைக் கண்டு கலங்கி நின்றிருக்கிறான். ஆயினும் அவன் தன் இலட்சியப்பாதையை விட்டு ஒதுங்கிவிடவில்லை. தர்மம் என்றோ ஒரு நாள் வெல்லத்தான் போகின்றது. தன் கடமைகளைத் தான் செய்து முடிக்கும் காலமும் வரத்தான் போகின்றது என்று

படிப்பகம்

www.padippakam.com



உறுதியாக நம்பிச் செயற்பட்டான். அவனுக்குச் சகோதரங்கள், உதவியாக இருந்தார்கள்; கண்ணனும் கூட இருந்தான்; வெற்றியும் கிடைத்தது. உனக்குச் சகோதரங்கள் உதவியில்லை. ஆனால் கண்ணன் உன் கூட இருக்கிறான். உன் கனவுகள் நிறைவேறத்தான் போகின்றன. என்றோ ஒரு நாள் எங்கள் வீட்டை மீண்டும் நீ வாங்கத் தான் போகின்றாய். இந்த நம்பிக்கை எங்களுக்கு நெஞ்சு நிறைய இருக்கு. அது தான் நானும், உன் அப்பாவும் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறோம். நீ சோர்ந்து விடாதே! உன்னால் முடியும் மகனே ! நீ கண்ணனின் குஞ்சு அப்பா ! தாயின் வார்த்தைகள் சிவாவின் செவிகளினுட் புகுந்ததும் அவன் நாடி நரம்புகளெல்லாம் வீங்கிப் புடைத்தன. கண்களிரண்டும் விரிந்து இரு சூரியன்களாக ஒளிர்ந்தன. அவன் நெஞ்சில் ஆயிரம் யானைக ளின் பலம் குடியேறியது. அவன் எழுந்து நின்றான்.

அவனுள்ளத்தில் சற்று முன்பிருந்த விரக்தி, கலக்கம், கவலை, தோல்வியுணர்வு யாவும் பகலோனைக் கண்ட பனிப்புகார் போல ஓடி மறைந்தன.

அவன் தாயையும் தகப்பனையும் பார்த்து, உங்கள் ஆசைகளை நிச்சயம் நிறைவேற்றி வைப்பேன்" என்று உறுதிபடக் கூறிவிட்டு விடைபெற்றான்.

அவனைப் பார்த்து கனகர், "சிவா தோல்விகளைக் கண்டு எவ னொருவன் சோர்ந்து விடுகின்றானோ, அவனால் சரித்திரம் படைக்க முடியாது. தோல்விகளை முன்னேற்றத்தின் படிக்கட்டுக்களாக்க வேண்டும். ஒவ்வொரு தோல்வியும் நெஞ்சின் உறுதியை வளர்க்கவே ண்டும். அப்போ தான் வெற்றியின் உச்சியை அடையமுடியும் " என்று மகனுக்கு உற்சாகமூட்டினார்.

" நான் இன்று இங்கு வராவிட்டால் , என்கதை வேறு விதமாக முடிந்திருக்கும். இப்போ தெரிகிறது என் பாதை எதுவென்று. இனி நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. யோசிக்காமல் படுங்கோ. " என்று விட்டு, சிவா சைக்கிளை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பினான்.

போகும்போது வெறும் நட்சத்திரங்கள் மட்டும் இருந்த வானில் இப்போ வெண்ணிலவும் தெரிந்தது. " என்ன நிலவே ! நான் சாகப் போவதைப் பார்க்கலாம் என்று வந்தாயோ ? அது தள்ளிப் போட்டாச் சப்பா. நான் சாதிக்கவேண்டியவை இன்னும் பல இருக்கப்பா ! என்று தனக்குள் நிலவிற்குக் கூறிக்கொண்டு சைக்கிளை ஓட்டி னான்.

நேரம் பத்து மணியைத் தாண்டிவிட்டது. வழியில் ஒரு கடை ஒற்றைக்கதவில் திறந்திருந்தது. பூட்டுவதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. சிவா கடையைக் கடந்து சிறிது தூரம் சென்றதன் பின் ஏதோ நினைத்தவனாக சைக்கிளைத் திருப்பி கடை வரை வந்து, அதை அருகிலிருந்த மரமொன்றில் சாத்திவிட்டு , கடைக்குச் சென்று தேங்காயும் ஒரு கட்டி கற்பூரமும், ஒரு தீப்பெட்டி என்பவற்றை வாங்கிக் கொண்டு வந்து மீண்டும் , சைக்கிளை தன் ஊரை நோக்கிச் செலுத்தினான்.

படிப்பகம்

www.padippakam.com



அவன் மூளை இயந்திரமாக இயங்கத் தொடங்கியிருந்தது. அதன் ஒரு பகுதி என்ன செய்வதென்று சிந்தித்தது; மறுபகுதி கடவுளைத் துணைக்கழைத்தது.
வானைப் பார்த்தான்.
'ஏய் வானமே நிலவே ! காற்றே! கடல் அலையே ! நீங்களெல்லாம் போய் அங்கே பாற்கடலில் அனந்த சயனத்திலிருக்கும் கண்ணனிடம் சொல்லுங்கள், எங்கள் ஊரில் அவன் கோவிலுக்கு நான் கற்பூரம், தேங்காயுடன் போய்கொண்டிருக்கிறேன். அவனையும் அங்கு வரும் படி, இப்படி எத்தனையோ வார்த்தைகள் அவன் நொந்து போன நெஞ்சிலிருந்து அடுக்கடுக்காக வந்தன. இதனால் அவன் நெஞ்சம் ஏதோ ஒரு ஆறுதலைப் பெறுவதை அவனால் உணரமுடிந்தது. கோ விலுக்கு வந்த சேர்ந்ததும், சைக்கிளைத் தேர்முட்டியில் சாத்தி விட்டு, கோபுர வாசலை நோக்கி நடந்தான். ஆலயக்கதவு சாத்தப் பட்டுவிட்டது. மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன.
முன் மண்டபம் வரை வந்து கற்பூரத்தை, தீப்பெட்டியைத் தட்டிக் கொழுத்திவிட்டு கண்களை மூடிக்கொண்டு கண்ணனை வணங்கி னான். அவன் மனக்கண்ணால் மூடிய கதவுகளூடாக ஆதிமூலத் தைப் பார்க்க முடிந்தது.
" கண்ணா ! நீ என் கடவுளப்பா. எனக்கு மட்டுமல்ல, என் பரம்ப ரைக்கே நீ தானே கடவுள். ஏனப்பா எனக்கு இப்படி ஒரு சோதனை ? எப்படியிருந்தவன் இன்று எப்படி நிற்கிறேன் பார்த்தாயா ? என்னி டம் ஒன்றுமேயில்லை. பார்த்த வேலை பறி போய்விட்டது. கூடப் பிறந்தவர்கள், தாலி கட்டிய மனைவி எல்லோரும் என்னைப் புறக்கணித்து விட்டார்கள். பிறந்து வளர்ந்த வீடும் விற்றுச் சீதனம் கொடுத்தாகிவிட்டது. இன்று நான் ஒரு வெறுவிலி; தனிமரம். என்னைப் பெற்றவர்களுக்கு ஒரு வேளை உணவு கொடுக்க முடியா தளவிற்கு என் நிலை இறங்கிவிட்டது. இது தான் என் வாழ்க்கையா ? இப்படி ஒரு வாழ்க்கை நான் வாழவேண்டுமா?
கண்ணா ! நீ தான் எனக்கெல்லாம். உன்னிடம் நான் என் குறைக ளைச் சொல்லலாம். உன்னால் தான் என்குறைகளைப் போக்க முடியும். நீ தான் என் தலைவனப்பா. காலம் என்னைச் சோதிக்கி றது. கடவுள் நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயே ! தோல்விக்கு மேல் தோல்வி வந்து என்னுள்ளம் சோர்ந்துவிட்டது. பசியும், கடனும், பாசம் வைத்தவர்களின் பிரிவாலும் என் இதயமும் உடலும் வலிமை இழந்துவிட்டன. இனியும் என்னால் தாங்க முடியாது. நான் களைத்து விட்டேன். " என்ற அவன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.
" கடவுளே ! கடன்களைப் போக்கு, விற்ற நிலத்தையும் வீட்டையும் மீண்டும் எங்களுக்குச் சொந்தமாக்கு. பிரிந்த எங்கள் எல்லோரையும் முன்போல ஒன்று சேரவை. இத்தனையும் ஆறு மாதங்களுக்குள் நடந்தாக வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு தேங்காயை ஓங்கி முன்னாலிருந்த கல்லில் அடித்தான். தேங்காய் வெடித்துப் பல துண்டுகளாகச் சிதறியது. அதனுள்ளிருந்த இளநீர் தெறித்து அவனு டலை நனைத்தது.
சிவா சற்றுப் பின்னால் நடந்து, அந்த மணல் நிலத்தில் ஆயிரமாயி ரம் அடியார்களின் பாதம் பட்ட அந்த மண்ணில் வீழ்ந்து வணங்கி விட்டு எழுந்து நின்று,

படிப்பகம்

www.padippakam.com



" இது உன்னால் முடியும். அப்படியில்லாமல் , போனால் போகட்டுமென்று நீ பேசாமலிருந்து என், வேண்டுகோள் ஆறுமாதங்களுக்குள் நிறைவேறாமல் போனால் இந்த சிவா, இந்த ஊரிலென்ன, இவ்வுலகத்திலேயே இருக்கமாட்டான்" என்று விட்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

## 3

மறுநாள்.

பொழுது விடிவதற்குள் எழுந்து, அழுக்காக மூலைக்குள் எறிந்து கிடந்த உடுப்புக்களையெல்லாம் தோய்க்க நனைய வைத்துவிட்டு, வீட்டிற்குள் ஆங்காங்கே சிதறிக்கிடந்த சாமான்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கி, வீட்டையும் சுத்தம் செய்தான். பின் சலூனிற்குச் சென்று, காசு சில நாட்கள் கழித்துத் தரலாமென்று தலைமுடியையும் வெட்டி, முகச்சவரமும் செய்து முடித்தான்.
சண்முகம் கடையில் போய், பாணும், இரண்டு வாழைப்பழங்களும் கடனாக வாங்கி வந்து சாப்பிட்டு விட்டு, உடுப்புக்களைத் தோய்த்து உலரவிட்டான். பின் விளக்குமாற்றை எடுத்து முற்றத்தையும், மரங்களுக்குக் கீழ் வீழ்ந்து கிடந்த சருகுக்குப்பைகளையும் கூட்டினான். அவன் நெஞ்சில் இனந்தெரியாத ஒரு உற்சாகம் குடியேறி வளரத் தொடங்கியது.
அப்போ "மாஸ்ரர்".
சிவா மாஸ்ரர் என்று யாரோ அழைப்பது கேட்டு, விளக்கு மாற்றை வைத்துவிட்டு, முன்புறம் வந்தான். அங்கே அவனிடம் படித்த மாணவி உமா நின்றாள். வா ! வா ! என்ன விசேடம் ?" என்று அவளை வீட்டிற்குள் அழைத்தான் சிவா.
அவளும் உள்ளே வந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.
"துளசியக்கா இல்லாவிட்டாலும் வீட்டை இவ்வளவு அழகாக வைத்திருக்கிறீங்கள்! என்று வியந்தாள் உமா. ' நல்லதாப் போச்சு.

படிப்பகம்

www.padippakam.com



காலையில் எழுந்து வீடு சுத்தம் செய்தது.. இல்லாட்டில் மானம் கப்பலேறியிருக்கும் ! என்று தனக்குள் நினைத்துக் கொண்டு,
" வேறு என்ன எனக்கு வேலை? அது தான் அதை இதைச் செய்து கொண்டிருக்கிறன்." என்றான்.
உமாவின் வீடு அவன் வீட்டிலிருந்து நான்கைந்து வீடுகள் தள்ளியி ருந்தது. படிப்பில் நல்ல கெட்டிக்காரி; விளையாட்டுக்களிலும் ஓரளவு முன்னுக்கு நிற்பவள்; ஆள் கொஞ்சம் கறுப்பு; ஆனாலும் அவள் கண்களும் , மூக்கும், வழுவழு என்ற கன்னங்களும், நெஞ்சங்க ளைக் கொள்ளை கொள்ளும் சிரிப்பழகும் பார்ப்போரை இன்னும் ஒருமுறை பார்க்கச் செய்யும். " எப்போ திரும்பப் பள்ளிக்கூடம் வருவீங்கள் ?" கேட்டாள் உமா.
" தெரியாது ; சில நேரங்களில் நிரந்தரமாகவே நிற்பாட்டினாலும் நிற்பாட்டி விடுவார்கள். "
" ஏன் சேர் அப்படிச் சொல்கிறீங்கள்? நீங்கள் இல்லாத குறை எங்கள் வகுப்பிலே அப்படியே தெரிகிறது. இரண்டு மாஸ்ரர்களைப் பிறின்சிப்பல் கெமிஸ்ற்றிக்குப் போட்டிருக்கிறார் . ஒருத்தர் படிப்பிப் பது கூட எங்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் படிப்பிக்க வந்தவர் களா அல்லது பாட்டுப்பாடி எங்களைத் தூங்க வைக்க வந்தவர்களா என்று தெரியவில்லை சேர். "
அவன் இதழ்விரியாமல் சிரித்தான்.
சேர் உங்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்,. பதிலுக்கு நீங்களும் எனக்கொரு உதவி செய்யவேண்டும். "
" எனக்கு வேலை எடுத்துத் தந்தால் தான் நான் உனக்கு உதவி செய்வேனா ? இல்லாவிட்டால் உதவி செய்யமாட்டேனா ?"
" அது எனக்குத் தெரியும் சேர். சும்மா தமாஸிற்குச் சொன்னேன்.
" சரி விடயத்தைச் சொல் நான் என்ன உனக்குச் செய்யவேண்டும்?"
"சேர் பரீட்சைக்கு இன்னும் இரண்டு மாதங்கள் தானிருக்கின்றன. நீங்கள் படிப்பித்ததில் இருந்து இரசாயனயவியலைத் தொடர்ந்து எங்களுக்குப் படிப்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் எல் லோரும் குண்டு தான் போட வேண்டி வரும் சேர்.
" படிப்பிக்கிறதில் எனக்கொரு தடையுமில்லை. ஆனால் எங்கே வைத்துப் படிப்பிக்கிறது ?"
" பள்ளிக்கூடத்திலேயே படிப்பிக்கலாம் சேர். அதற்கு நாங்கள் பிறின்சிப்பலுடன் கதைத்து ஒழுங்கு செய்கிறோம் என்றாள் உமா ஆவல் வார்த்தைகளில் பறக்க, "ம்..ம்...வேண்டாம் உத்தியோகபூர் வமாக மீண்டும் எனக்கு வேலை கிடைக்கு மட்டும் நான் அந்தக் கட்டிடத்திற்குள் காலடி எடுத்து வைக்க மாட்டேன்" என்றான் சிவா.
" அப்போ எங்கள் ஊர் பாடசாலைக் கட்டிடத்திற்குள் வைத் தால்...?"
"ஓ ! ஆனால் பிள்ளைகள் வந்து போவது சிரமமாக இருக்குமே.."
" அதொன்றும் பிரச்னையில்லை. சைக்கிளிலோ பஸ்ஸிலோ வந்து சேர்வார்கள். உங்களுக்கு வசதியென்றால் சரி.
" எனக்கு ஓகே" என்றான் சிவா.
" ரொம்ப நன்றி சேர்" என்ற அவள் முகம் மலர்ந்த அந்த மலர்ச்சி சிவாவின் நெஞ்சில் ஒரு சுகத்தை தெளித்தது.
உமாவே மேலும் தொடர்ந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



" சேர். உங்கள் வேலை விடயம். வெளிநாட்டு ஆங்கில செய்தி ஸ்தாபனம் ஒன்றிற்கு படப்பிடிப்பு, மொழிபெயர்ப்பிற்கு ஒரு உதவி யாளர் தேவை. கொஞ்சம் விஞ்ஞான அறிவும் இருந்தால் நல்ல தென்று அப்பா வீட்டிலே கதைத்தபோது, எனக்கு உங்கள் ஞாபகம் வந்தது. உங்களைக் கேட்காமலே அப்பாவிடம் உங்கள் பெயரைக் கொடுத்துவிட்டேன். கோபிக்கிறீங்களா ?"

"சீ.. சீ நன்மை தானே செய்திருக்கிறாய். நான் ஏன் கோபிக்கப் போகின்றேன் ? என்று அவளை நன்றி ததும்ப பார்த்தான்.

" உங்களுக்கு விருப்பமென்றால் மிகுதி விபரங்களை எங்கள் வீட்டிற்கு வந்து அப்பாவுடன் கதையுங்கள்" என்றாள்.

" அப்பா எப்போ வேலையால் வருவார் ? என்ற சிவாவின் வார்த்தைகளில் அவசரம் தொனித்தது.

" ஏழு, ஏழரைக்கெல்லாம் அநேகமாக வந்திடுவார். இன்றைக்கு உங்களுக்கு நேரம் இருக்கா சேர். எங்கள் வீட்டிற்கு வர ? " என்ற உமாவின் உள்ளமும் இனந்தெரியாமல் குதூகலித்தது.

" உமா ! என்று விட்டு, வயதில் குறைந்த இவளிடம் தன் உள்ளப் போராட்டங்களைக் கொட்டுவதா ? என்று நிறுத்தினான்.

ஆனால் உமா விடவில்லை.

" என்ன சேர் சொல்லுங்கோ. "

" அதொன்றுமில்லை. இரவுக்கு அப்பாவை வந்து பார்க்கிறேன். " இல்லை , நீங்கள் வேறேதோ சொல்லத் தொடங்கி விட்டு நிறுத்தி விட்டீங்கள். "

அவன் வெளியே கண்களை ஓட்டியவாறு ஏதும் பேசாது இருந்தான்.

" என்ன சேர் சொல்லத் தொடங்கிவிட்டு பாதியிலே நீங்கள் நிறுத்தியது எனக்கு எவ்வளவு கவலையாக இருக்கு,.. " என்ற உமா தன் முகத்தைச் சரித்து, அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் கண்கள் நனைந்திருப்பது கண்டு, அதிர்ந்து போய்,

" என்ன சேர்? " என்று துடிதுடித்தவாறு எழுந்து விரைந்து அவனருகே சென்று, அவன் கண்ணீரைத் துடைக்க விழைந்தாள். அவள் கரங்களை நன்றியும், அன்பும் ததும்ப பற்றிய சிவா,

எனக்கிருக்கின்றன பிரச்னைகளை யாரிடமாவது சொன்னால் தான் என் மனம் ஆறும். ஆனால் எனக்குத் தான் யாருமே இல்லையே. "

"ஏன் இல்லை சேர் ? சிவா மாஸ்ரருக்கு ஒன்றென்றால் எங்கள் பள்ளிக்கூடமே வந்து நிற்கும் சேர். "

"ம்... அந்தப் பள்ளிக்கூடத்தால் வெளியே தள்ளப்பட்டவன் தான் இந்த சிவா. "

"சேர் ! உங்களைப் பற்றி எல்லோருக்கும் என்றும் நல்ல அபிப்பிராயம் இருக்கு. விரைவில் அந்தப் பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு வேலை கிடைக்கும்.

அவன் ஏதும் பேசாதிருக்கவே,

"சேர், உங்கள் பிரச்னைகளைத் தாராளமாக எனக்குச் சொல்லலாம். "

அவனும் சொன்னான். கண்ணீர் அடிக்கடி கரை கடந்தது. பெண்பிள்ளைக்கு முன் அழுது வடிக்கக்கூடாது என்று பெரும்பாடு பட்டு அடக்கிக் கொண்டான். உமாவிற்கும் அவனது உள்ளக்குமுறல்களைக் கேட்கக் கண்கள் கலங்கின.

படிப்பகம்

www.padippakam.com



" உங்கள் தம்பி தங்கைகள் தங்களுக்கென்று ஒரு வாழ்வு வந்ததும் உங்களை மறந்துவிட்டார்கள். இது அநேக குடும்பங்களில் நடப்பது தான். ஆனால் துளசி அக்கா ஏன் உங்களை விட்டுப் போனா என்று தான் என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. " என்றாள் உமா.
"நான் சகோதரங்களில் அதிக பாசத்தை வைத்துவிட்டேன். ஆனால் இன்று எந்தப் பாசமுள்ளோரும் இன்றி அநாதையாக நிற்கின்றேன். "
"ஏன் சேர். உங்கள் முன்னுக்கு நிற்கிற நான் உங்கள் மீது பாசமில்லாதவளா ?"
" உன் அன்பை எனக்குத் தெரியும். என் குடும்பத்தவரை எண்ணி இப்படிச் சொன்னேன். " என்றான் சிவா.
பின்பு சிறிது நேரம் இருந்து கதைத்துவிட்டு, இரவு வீட்டிற்கு வரும்படி கூறி விடைபெற்றாள் உமா.
அவள் போன பின் உற்சாக பானம் குடித்தவன் போல வளவிற்குள் அங்கும் இங்குமாக நடந்தான். அவன் இருண்ட வாழ்க்கைக்கு ஒரு சீரிய உதயம் தோன்றப் போகிறது என அவனுள்ளம் சொல்லியது.
'உமாவின் அப்பா இந்த வேலையை எடுத்துத் தந்தால் எவ்வளவு நல்லாக இருக்கும்/ கிடைக்காவிட்டால்..? போகட்டும். இன்னொரு வேலை தேடிக் கொள்கிறேன். இனியும் வீட்டிற்குள் அடங்கியிருந்து அழுதது போதும் கவலைகளே இனி உங்களுக்கு என் நெஞ்சில் இடம் கிடையாது. கண்ணீரே இனி உனக்கு இங்கு வேலையில்லை. நான் வெற்றி தேடிப் புறப்பட்டுவிட்டேன். குறுக்கே எந்தப் பாறை கிடந்தாலும் தகர்த்தப்பட்டு பாதை அமைக்கப்படுமென்று ஏதோ வேகத்தில் கொக்கரித்தான்.
மாலையானது. சிவா உமா வீட்டிற்குச் சென்றான். பிளேக் என்ற ஆங்கிலேயர் செய்தி சேகரிப்பு ஸ்தாபனத்தை நடத்துகின்றார். அவருக்கு இலங்கையைச் சேர்ந்த உதவியாளர் இருந்தார். அவர் ஏதோ சுகயீனம் காரணமாக அவ்வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாமல், வேலையை விட்டதால் அந்த இடத்திற்கு சிவாவின் பெயரைக் கொடுத்திருந்தாள் உமா. இப்போது பிளேக் இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் போயிருப்பதாகவும், திரும்பி வர குறைந்தது இரண்டு மாதங்களாகும் என்றும், வந்ததும் சிவாவை அவருக்கு அறிமுகப்படுத்துவதாயும் வேலைக்கு ஆள் தேவையெனின் நிச்சயம் அவனை பிளேக் வேலைக்கு எடுப்பார் என்றும் கூறினார் உமாவின் அப்பா.
பாலர் பாடசாலைக் கட்டிடத்திற்குள் பாடம் சொல்லிக் கொடுத்தத் தொடங்கினான் சிவா. ஏறக்குறைய ஐம்பது மாணவர்கள் வருவார்கள். தினமும் பிற்பகல் நான்கு மணிக்கு வகுப்பு நடைபெற்றது. மாணவர்களுக்கு எல்லையற்ற சந்தோஷம். அவர்களுக்குப் புரியாத அத்தனையும் புரிய வைத்து பரீட்சைக்குத் தயாராக்கினான் சிவா. பசி வயிற்றைக் கிண்டும். சண்முக அண்ணையின் கடையில் பாண் வாங்கியே நூறு ரூபாவிற்கு மேல் கடன் வந்துவிட்டது. சண்முகம் சிவாவைப் பற்றி நன்கு அறிந்திருந்தவர். அத்துடன் அவன் வேலை செய்யும் போது சகல சாமான்களையும் அவர் கடையிலேயே உடன் காசு கொடுத்து வாங்குவான். இதை நினைத்து அவர் இன்னும் அவனுக்குக் கடன் கொடுத்தார். தனக்கு காசு நெருக்கடி வரும்போது

படிப்பகம்

www.padippakam.com



அவனிடம் கேட்பார். அவன் பேசாமலிருப்பது கண்டு சரி விரைவில் ஒழுங்கு செய் தம்பி என்பார்.
பிளேக் மீண்டும் இலங்கை திரும்பியதும் உமாவின் அப்பா சங்கரப் பிள்ளை சிவாவை அவரிடம் கூட்டிச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார். பிளேக் மிகவும் நல்லவரென்பதை அவரோடு பேசிக் கொண்டிருந்த அந்த அரைமணி நேரத்தில் அறிந்து கொண்டான் சிவா. அவருக்கும் சிவாவைப் பிடித்துக் கொண்டது. வருகிற முதலாம் திகதியிலிருந்து அவன் தன்னுடன் வேலை செய்யலாம் என்றதுடன் , வேலை விபரங்களையும் கூறினார்.
முக்கியமான செய்திகள் சேர்ப்பது; கலாச்சாரம் சம்பந்தப்பட்டவை; இயற்கையின் வினோதங்கள்; அசம்பாவிதங்கள் என்பவற்றை முடிந்தால் வீயோப் படமாக அல்லது புகைப்படங்களாக எடுப்பதும், இது சம்பந்தமாக மக்களைப் பேட்டி காண்பதும், அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது போன்றனவே சிவா பிளேக்குடன் சேர்ந்து செய்யவேண்டிய வேலைகள். இதற்கு வேண்டிய பயிற்சிகளை ஆரம்பத்தில் அவனுக்குக் கற்றுக் கொடுப்பதாகக் கூறினார். மேலும் அவன் இது சம்பந்தமாகச் செய்திகள் சேர்க்க சீனா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளுக்கு அவருடன் செல்லவேண்டும். சிவா முழுமனதுடன் சம்மதித்தான். இறுதியில் அவனும், சங்கரப்பிள்ளையும் பிளேக்கிற்கு நன்றி கூறி விடைபெற்றனர்.
வீட்டு வாடகையை, பல மாதங்களாகத் தரவில்லை என்பதற்காக வீட்டுக்காரர் சிவாவைத் தாறுமாறாக ஏசினார். அவரை அமைதிப்படுத்தி ஆறுமாதங்களுக்குள் தரவேண்டிய வாடகைப் பணத்தை தந்து முடிக்கின்றேன். அத்தோடு இப்போ தரவேண்டிய வாடகைப் பணத்துடன் இனிவரப் போகின்ற ஆறுமாதங்களுக்குரிய வாடகை மொத்தத்தையும் கூட்டி அத்தனைக்கும் வட்டி தருவதாகக் கூறியதுடன் எழுத்திலும், கடன்பத்திரத்திலும் கையொப்பம் வைத்துக் கொடுத்தான்.
ஐம்பதினாயிரம் கடனுக்கு மாதாமாதம் வட்டி தரவேண்டும் என்று தினமும் வந்து நச்சரித்துக் கொண்டிருந்த மற்றக் கடன்காரரும் வட்டிக்கு வட்டி தரலாம் ஆறுமாதங்கள் பொறு என்று கூறி அவரையும் அடக்கினான் சிவா.
ஒரு நாள் சண்முக அண்ணையின் கடையில் வழக்கம் போல பாண் கடன் கேட்டான் சிவா.
அவரும் ஏதோ பண நெருக்கடியில் மனக்கொதிப்புடன் இருந்தவர் சிவா மேலும் கடன் கேட்டதும், " தம்பி, நீங்கள் படித்தனீங்கள், படிப்பிக்கிறனீங்கள், என்று இத்தனை நாட்களும் பொறுமையுடன் இருந்தேன். ஆனால் இப்ப என்னால் முடியாது தம்பி. பழைய கடனைப் பிறகு தந்தாலும் பரவாயில்லை. இனி மேல் உடனுக்குடன் காசு தந்தால் தான் என்னால் பாணோ மற்றப் பொருட்களோ தரமுடியும்" என்று சற்று உரக்கமாகவே கூறினார்.
" சரி " என்றுவிட்டு சிவா வீட்டிற்கு திரும்பினார். பசி அவன் குடலை கிண்டியது. உடலும் சோர்ந்துவிட்டது. மாலை நான்கு மணிக்கு A/L வகுப்பு மாணவர்களுக்கு வழக்கம் போலப் படிப்பிக்கப் போகவேண்டும். அதுவரை படுத்துத் தூங்கினால் நல்லதென்று தோன்றவே பாயை விரித்துப் போட்டுப் படுத்தான். மீண்டும் விழித்

படிப்பகம்

www.padippakam.com



தபோது நேரம் மூன்றரை. உடம்பெல்லாம் வியர்த்து நனைந்திருந் தது. அவசரமாக எழுந்து உடம்பைக் கழுவிக்கொண்டு உடுப்புக் களை அணிந்து கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு பாலர் பாடசாலைக் கட்டிடத்திற்கு புறப்பட்டான். நான்கு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்களிருந்தன. எனினும் எல்லா மாணவர்களும் வந்திருந் தார்கள். அவன் பாடத்தை தொடக்க கரும்பலகையை நோக்கி நடந்தான். அப்போ உமா அவனிடம் வந்து, " சேர்!இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றன. நாங்கள் நேற்றுப் படித்தவற்றைத் திருப் பிப் பார்க்கின்றோம். நீங்கள் ஒருக்காக எங்கள் வீட்டிற்குப் போய் விட்டு வாருங்கோ. அம்மா உங்களோடு ஏதோ அவசரமாகக் கதைக்கவேண்டுமாம்" என்றாள்.

'பிறகு போகிறேன். " என்றான் சிவா.

"இல்லை சேர். ஏதோ முக்கிய விடயம். இப்போ வரச் சொன்னா" என்று அவசரப்படுத்தினாள் உமா. வேறு வழியின்றி மாணவர்களை சிறிது நேரம் அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு, உமா வீட்டிற்குச் சென்றான் சிவா.

உமாவின் அம்மா சிவாகமி சிவா வருவதைக் கண்டதும் வரவேற்று, சாப்பிட அழைத்தாள். அவன் மறுத்தான். " எனக்கெல்லாம் தெரி யும். சாப்பிடு . பிறகு கதைக்கலாம்" என்று சோற்றையும் கறியையும் தயாராக வைத்திருந்த வாழையிலையில் போட்டாள்.

எத்தனையோ நாட்களின் பின் இப்படி ஒரு ருசியான சாப்பாடு. உடலும், உள்ளமும் சிவாகமியம்மாவிற்கு ஆயிரமாயிரம் நன்றி கூறின. அதை வடிக்க வார்த்தை வராமல் கண்கள் கண்ணீரால் நன்றி பகர்ந்தன.

" சண்முகண்ணை எனக்கு எல்லாம் சொன்னார். தான் ஏதோ கோபத்தில் சொல்லிவிட்டாராம். நீ பாணும் வாங்காமல் போய்விட் டாயாம். பசியோடு இருப்பாய் என்று நான் கறிசாமான் வாங்கப் போனபோது கவலைப்பட்டார்" என்றாள் சிவகாமி.

சிவா சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டான்.

"இனிமேல் பாண் கிண் ஒன்றும் வாங்கவேண்டாம். எங்கள் வீட்டி லேயே சாப்பிடலாம் வா. " என்றாள். கண்டிப்புடன். அரைமனதுடன் தலையாட்டி விட்டு புறப்பட்டான் சிவா.

படிப்பு முடிந்ததும் உமா அவனிடம் வந்து,

" உங்களுக்கு என் மீது அன்பே இல்லை சேர் " என்றாள். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று விழித்தான் சிவா.

"இல்லாட்டி சண்முகம் அண்ணை கடைக்க கடன் கொடுக்கவேண் டுமென்றோ, நீங்கள் அடிக்கடி பட்டினி கிடப்பதையோ எனக்கு ஏன் சொல்லவில்லை? நான் ஒருத்தி இருப்பது உங்களுக்கு நினைவிற்கு வருவதில்லை. " என்றாள் கோபம்பட,

" எல்லாம் மானப்பிரச்னை என்பதால் தான்" என்ற அவன் அவ ளைச் சமாதானப்படுத்த நீண்டநேரம் எடுத்தது.

இறுதியில் உமா, " எங்கள் வீட்டிற்கு தினமும் சாப்பிட வரவேண் டும். இல்லாவிட்டால் உங்கள் வீட்டிற்கு நான் வந்து அடுப்புமூட்டிச் சமைத்துத் தரவேண்டி வரும்" என்று கூறிவிட்டு, அவன் கையை ஏதோ ஒரு பிணைப்புடன் பிடித்து அமுக்கிவிட்டு புறப்பட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவள் போவதைப் பார்த்துக் கொண்ட நின்ற சிவா. யார் இவள் ? யாரோ இவள் எரிகிற என் நெஞ்சில் குளிர்பாலை ஊற்றுகின்றாள் என்றான் தனக்குள்.

நாட்கள் சில நகர்ந்ததும், மாணவர்கள் பரீட்சைப் படிகளைச் சந்தித்தனர். அத்துடன் சிவா அவர்களுக்காக நடத்திய இலவச வகுப்பும் முடிவடைந்தது. இறுதி வகுப்பன்று அவர்கள் அவனுக்கு உள்ளம் நிறைய நன்றி கூறி விடைபெற்றனர்.

உமா வீட்டிற்கு இடைக்கிடை சிவா போய் வந்தான். பின் அவன் வேலையும் தொடங்கியது. பிளேக் அவனுக்கு எல்லா வேலைகளை யும் கற்றுக் கொடுத்தார். சிவாவிற்கு ஆரம்பத்தில் எல்லாமே தலை கீழாக இருந்தது. எனினும் ஆர்வமும், அவசியமும் அவனுக்கு இருந்ததால் பொறுமையுடன் செயற்பட்டான். அவன் திறமையைக் கண்டு பிளேக் அடிக்கடி பாராட்டினார். சிவா தன் கஷ்டங்களை அவரிடம் சொன்னான். என்னிடம் வேலை செய்தால் உன் கஷ்டம் எல்லாம் ஒரு வருடத்தில் பறந்துவிடும்" என்றார் அவர்.

கை நிறையச் சம்பளம் கிடைத்தது. உமாவிற்கும், அவள் அப்பாவிற் கும் உளமார நன்றி கூறினான். தன் இலட்சியங்கள் நிறைவேறும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது அவன்மனக்கண்முன்னே தெரிந்தது. கடனை அடைப்பது, வீட்டை மீண்டும் வாங்குவது, சகோதரங்களும் துளசியும் மீண்டும் தன்னிடம் வருவது.... என்று நினைக்க நினைக்க அவன் இதயத் தோட்டத்தில் ஆயிரமாயிரம் வண்ணமலர்கள் மலர்ந்து சிரித்தன.

அன்று துளசிக்குப் பிறந்தநாள். கோவிலுக்குச் சென்று அவள் பெயரில் அர்ச்சனை செய்துவிட்டு, கடையிலே அவளுக்கு ஒரு சேலையும் வாங்கிக் கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றான்.

அவனைக் கண்டதும், மலர்ந்த துளசியின் முகம் பின் சட்டென்று இருண்டது.

சிவா, தான் கொண்டு வந்த சேலையை அவளிடம் கொடுத்து பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தான். அவள் அவனை வரவேற்று உட்கார வைத்து தேநீர் கொடுத்தாள்.

"ஏன் முகத்தில் சிரிப்பே வராதா ?" கேட்டான் சிவா.

" நான் ஏன் சிரிக்கவேண்டும் ? உங்களுக்குத் தானே உமா இருக்கி றாள். அவள் தினமும் உங்களுக்காகச் சிரிக்கின்றாளாமே. துளசியின் வார்த்தைகளில் சந்தேகப் பேய் தாவியிருந்தது.

" உமாவும், அவள் குடும்பமும் இல்லாவிடின் நான் என்றோ ஒரு நாள் ஓரத்திற்குத் தள்ளப்பட்டிருப்பேன். " உமாவை உங்களுக்கு இரண்டாந்தாரமாகக் கட்டி வைக்கத் தான் அவர்களெல்லாம் உங்களிற்குச் சர்க்கரை பூசுகிறார்கள். "

"துளசி ! என்று உரப்பிக் கொண்டே கதிரையை விட்டு எழுந்தான்.

" இது நான் சொல்லவில்லை. ஊரே சொல்கிறது. என்றாள் அவள்.

"நீ திருந்தவே மாட்டாய் " என்று கோபத்துடன் கூறிவிட்டு, சினந் தெறிக்க வெளியேறினான் சிவா.

அதன்பின் அவன் உமா வீட்டிற்குப் போகவில்லை. சில நாட்கள் கழித்து உமா அவன் வீட்டிற்கு வந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



"சேர் ! ஏன் வீட்டிற்கு வரவில்லை? கோபமா ? அப்பா, அம்மா எல்லோருக்கும் நீங்கள் வராதது மிகவும் கவலை..." என்று மேலும் ஏதேதோ சொல்ல விழைந்தவளை தடுத்து,
"உமா என்னை மன்னித்துக்கொள். இனிமேல் உங்கள் வீட்டிற்கு நான் வரமாட்டேன். நீயும் இங்கு வருவது நல்லாயில்லை." என்றான்.
" ஏன் சேர் ? " என்று பதறினாள் உமா. அவள் முகம் அவன் வார்த்தைகளைக் கேட்டதும் வாடிக் கறுத்தது. " என்னையும் உன்னையும் புரிந்து கொள்ளாத இந்த ஊர் உனக்கும் எனக்கும் முடிச்சுப் போடுகிறது. உன்னை நான் இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்யப் போகிறேனாம். "
உமா சிரித்தாள். அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். "சேர் , இதற்குப் போய் எங்கள் வீட்டிற்கு வரமாட்டேன் என்கிறீங்களே. நான் உங்கள் மீது உயிரையே வைத்திருக்கிறேன். உங்களைக் கல்யாணம் செய்ய நான் கொடுத்து வைக்கவேண்டும்" என்ற உமா, சிவாவின் அருகில் சென்று, அவனை கையைப் பிடித்து படியில் இருக்க வைத்து, தானும் அவனருகில் இருந்துகொண்டே தன் நெஞ்சில் உள்ளதை அவன் முன் கொட்டினாள்.
சிவாவால் நம்பமுடியவில்லை.
'இவளிற்கு இந்தச் சின்னவயதில் இப்படி ஒரு எண்ணமா ?' என்று திகைத்து நின்றான்.
" என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி நான் முடிவெடுத்துவிட்டேன். இது அப்பா, அம்மா இருவருக்கும் தெரியும்." என்றாள்.
சிவா, அவள் முகத்தைத் தன்பக்கம் திருப்பி, "நீ ரொம்ப உயர்ந்து விட்டாய்" என்றான்.
" இனி எங்கள் வீட்டிற்கு வருவீங்களா ? என்றாள் அவள்.
" வருகிறேன்; இன்றைக்கே; இப்பவே " என்று அவளுடன் கூட அவள் வீட்டிற்குச் சென்றான் சிவா மறுநாள் வேலைக்குச் சென்ற போது, பிளேக் கடிதமொன்றைக் கவலையுடன் காட்டினார்.
அவர் மனைவி, அவரை விவாகரத்து செய்துவிட்டு, வேறு ஒருவரைக் கலய்ணம் செய்யப் போவதாகவும், அவள் இப்போ வீட்டில் இல்லை. தான் மறு கல்யாணம் செய்யப் போகிறவர் வீட்டிலேயே தங்கியிருப்பதாகவும் உடனே வீட்டிற்கு வரும்படியும் அவர் மகள் கடித்தில் எழுதியிருந்தாள்.
சிவா திடுக்கிட்டான். பிளேக்கிற்கு தன்னாலான ஆதரவு வார்த்தைகளைக் கூறினான். அவர் தான் திரும்பி வரும் வரை வேலைகளை நிறுத்தி வைக்கும் படியும் ஸ்தாபனம் அவர் மனைவி பெயரில் இருப்பதால் பெரும் சிக்கல் ஏற்படப் போகின்றது. நீதிமன்றம் கூடப் போக வேண்டி வருமோ தெரியாது என்று கூறிப்புறப்பட்டார்.
சிவாவிற்கு தலை சுற்றியது. ஆயிரம் சம்மட்டிகள் அவன் தலையில் விழுவது போல் இருந்தது. அவன் வீட்டிற்குத் திரும்பினான். கால்கள் மரக்கட்டைகளாக மாறிவிட்டன. அவனுள்ளம் இது என்ன சோதனையென்று கலங்கியது. தன் கனவுகளைக் கடல் கொண்டு போகிறதே என்று துடித்தன அவன் நரம்புகள்.
இப்படித் துன்பத்தின் போக்கிலேயே போய்க் கொண்டிருந்த அவன் எண்ணங்கள் சுருதிமாறின. ' ஒரு பாதை அடைத்துக் கொண்டால்,

படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு பாதையை உருவாக்கு"என்று ஒரு கத்தல் எழுந்தது அவன் மூளையின் ஒரு மூலையில்.
'ஆமாம் தோல்வியைக் கண்டு சோர்ந்து விடுவதில் அர்த்தமில்லை. போராடு ! போராடு ! இறுதிவரை போராடு !ஓடு ! ஓடு ! வெற்றியைத் தேடி ஓடு ! ' என்று மனதிற்குள் தானே தன்னதை தைரியப்படுத்திக் கொண்டு வந்த சிவா, ஓடு ஓடு என்ற எண்ணம் வந்தவுடன், வருகிற மாதம் ஏதோ ஒரு பெரிய வியாபார ஸ்தாபனம் இருபத் தைந்து மைல் மரதன் ஓட்டப்போட்டி நடாத்த இருப்பதும், அதில் முதலாவதாக வருபவருக்கு இருபத்தையாயிம் ரூபா பரிசு கிடைக்கு மென்பதும் நினைவிற்கு வரவே, மீண்டும் அவன் பழைய சிவாவாக வலுப்பெற்றான்.
ஓட்டப் போட்டிக்கு அவன் பெயரும் பதிவானது. இதையறிந்து " அண்ணனுக்குப் பைத்தியம் " என்றனர் சகோதரங்கள். " உங்களுக்கு வேண்டாம்; இது ஓட்டத்தில் சிறந்த இளம் பையன்களுக்குரிய போட்டி. வீணாக ஆசையால் விழுந்து கையைக் காலை உடைக்கப் போறீங்கள் " என்றாள் துளசி.
வெற்றி உங்களுக்கே என்று உற்சாகப்படுத்தினாள் உமா.
சிவா தன் உடம்பைத் துரும்பாக்கி பயிற்சி செய்தான். போட்டியும் வந்தது. போட்டியில் நூற்றியிருபது பேர் பங்கு பற்றினார்கள். அதில் சிவாவுடன் முன்பு பாடசாலையில் சரிக்குச் சரி போட்டியிடும் ரமேஸ் உம் நின்றான். அவன் சிவாவைக் கண்டதும் " உனக்கெல்ம் ஏன் இந்த வேலை? பேசாமல் படிப்பிக்கிற வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட்டு விட்டு, எங்களோடு போட்டி போட வந்து காலிற்குள் மிதிபட்டுச் சாகப் போகிறாய்." என்று நளினம்படக் கூறிவிட்டு சென்றான்.
சிவா ஆயிரம் அர்த்தம்பட ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு பேசாமல் நின்றான்.
ஓட்டப் போட்டியில் பங்குபற்றுபவர்களிற்குள் ரமேஸின் ரவுடி நண்பர் கள் சிலர் இருந்தனர். அவர்களிற்கு ரமேஸ் ஏதோ ரகசியமாக் கூறி வைத்தான்.
போட்டி ஆரம்பமானது. வீதியெங்கும் விளையாட்டு வீரர்களை உற்சாகமூட்ட மக்கள் ஆங்காகே கூடி நின்றனர். ஓட்டம் தொடங்கி முடியும் இடம் ஒரு பரந்த வெளியாக இருந்தது. மக்கள் அங்கே ஏராளமாக கூடி நின்றனர்.
கிராமங்கள், வெளிகள், வயல்கள், பட்டினங்கள் ஊடாக வீரர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். முதல் ஐந்து மைல்கள் தூரம் ஓடியதுமே பல வீரர்கள் பின்வாங்கிவிட்டார்கள். ஓட்டம் தொடர்ந்தது. பத்து மைல்கள், பதினைந்து மைல்கள், இருபது என்று ஓடி இன்னும் ஐந்து மைல்களே பாக்கியென்று வந்தபோது முப்பது வீரர்கள் மட் டுமே ஓடிக்கொண்டிருந்தனர். அவர்ளுக்குள் சிவா மத்தியில் ஓடிக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்த ரமேஸ், அவன் ஆட்கள் மூவரும் அவனை முந்தவிடாமல் தடுப்பதும், கைகளால் இடிப்பதுமாகத் தொந்தரவு கொடுத்தார்கள். சிவா பொறுமையுடன் பின்னால் தொடர்ந்தான்.
" இன்னும் நான்கு மைல்கள் " என்று அறிவிப்பு ஒலித்தது. 'விரைந் தோடினால் தான் முன்னால் போகிறவர்களைப் பிடிக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த ரமேஸின் ஆட்கள் வேண்டுமென்று தான் தன்னை முந்தவி டாது தடுக்கிறாங்கள். இனி என்னவானாலும் ஆகட்டும்' என்று அவர்களை இடித்து ஒதுக்கிவிட்டு முன்னால் ஓடினான்.

அப்போ ரமேஸ் தன் நண்பர்களுக்கு கண்காட்ட அவர்களில் ஒருவன் விரைந்து ஓடிக்கொண்டிருந்த சிவா வரை ஓடி, அவன் காலைத் தடக்கிவிட்டான். சிவா நிலைதடுமாறி தரையில் வீழ்ந்து புரண்டான். அவனிற்கு பின்னால் வந்தவர்கள் அவனை விலத்திக் கொண்டு ஓடினார்கள்.

சிவாவின் முழங்காலில் தசை வெடித்து இரத்தம் கக்கியது. காரில் வந்து கொண்டிருந்த முதலுதவியாட்கள் அவன் காலக்கு அவசரமாக கக் கட்டுப் போட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு போக முனைந் தனர். அவன் மறுத்து விட்டு போட்டியில் தொடர்ந்தும் ஓடத் தொடங்கினான். ரமேஸையும், அவன் நண்பர்களையும் விளையாட்டு நிர்வாகிகள் தொடர்ந்து ஓடவிடாது போட்டியினின்றும் அகற்றினர்.

சிவா ஓடினான். ஓடினான் அவனுக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந் தவர்கள் ஒவ்வொருவராக அவன் பின்னனுக்குத் தள்ளப்பட்டார்கள். கழுதைகளை முந்திக் கொண்டோடும் பந்தயக் குதிரை எனப் பறந்தான் சிவா. அவன் காலில் காயத்திற்குக் கட்டப்பட்டிருந்த வெள்ளை பான்டேச் வடியும் இரத்தத்தால் கொஞ்சம் கொஞ்சமாக சிவப்பாகியது. பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மயிர்க்கூச்செறிய, 'சிவா ஓடு , சிவா ஓடு ! என்று தங்களையறியாமலே கூவத் தொடங் கினர்.

இன்னும் மூன்று மைல்களே இருந்தன. சிவா நான்காவது இடத் தில் ஓடிக்கொண்டிருந்தான். அவன் கண்களில் வெற்றி ஒன்றே தெரிந்தது. உடம்பிலுள்ள அத்தனை இரத்தமும் வெளியேறினாலும் வெளியேறட்டும் உயிர் இருக்குமட்டும் ஓடியே தீருவேனென்று வைராக்கியம் அவன் நெஞ்சில் நிறைந்தது. தம்பிகள், தங்கைகள், மனைவி எல்லோரும் தன்னை ஒதுக்கி விட்டது. கடன், வீட்டு வாடகை என்று ஒவ்வொன்றும் அவன் நெஞ்சில் வர அவன் காற்றின் வேகத்திற்கு மாறினான்.

" எந்தப் போட்டிகளிலும் இல்லாத புதுமை ! படுகாயத்துடன் சிவா ஓடிக் கொண்டிருக்கிறார். இன்னும் இரண்டே மைல்களிருக்கின்றன. " என்று ஒலிபெருக்கி அலறியது.

சிவாவின் பெற்றோர், சுகு, கோமதி, மாலினி, துளசி, உமா, உல்லோரும் பந்தயம் முடியும் இடத்தில் ஆங்காங்கே நின்று கொண் டிருந்தனர். உமாவைத் தவிர மற்றவர்கள் சிவா இருபத்தைந்து மைல்களும் ஓடி முடிப்பதே கடினமென்று எண்ணியிருந்தவர்கள் அடிபட்ட காயத்துடன் விடாமல் ஓடிக்கொண்டிருக்கும் சிவாவை, ஒலி பெருக்கி அடிக்கடி பாராட்டுவது கேட்க நிலை கொள்ளாமல் அந்தரத்தில் துடித்தார்கள் அவர்கள். கண்களில் கண்ணீர் கக்கியது. ஓடு ! ஓடு ! அண்ணா ஓடு ! என்று அவர்கள் வாய்கிழியக் கத்தினர்.

சிவா எல்லோரையும் முந்திப் பறந்து கொண்டிருந்தான். என்ன நடக்கிறது ? ஏது நடக்கிறது ? என்று எதுவுமே அவனுக்குத் தெரிய வில்லை. வெற்றி ஒன்றே அவனுள்ளம், உடல், எண்ணம் எல்லாம் முடிவிடம் நெருங்கிக் கொண்டிருந்தது. பார்வையாளர்கள் கூட்டத் தில் ஒரே மகிழ்ச்சிக் கோஷம்.

படிப்பகம்

www.padippakam.com



கனகர் கண்ணகியைக் கட்டிப்பிடித்து, " எங்கள் பிள்ளை வென்று விட்டான்" என்றார். கண்ணகிக்கு வார்த்தைகள் வரவில்லை. ஆனந்தக் கண்ணீர் கொட்ட கணவனின் மார்பில் முகத்தைப் புதைத் தாள்.

"சிவா முதலிடத்தைப் பெற்றுவிட்டார். இது ஒரு மிகப் பெரும் சாதனை" என்று ஒலிபெருக்கியில் அறிவிப்பானது.

" அண்ணா !" என்றுகூவிக்கொண்டு, மொய்த்திருந்த அந்த சனக் கூட்டத்தை விலத்தியவாறு சுகு சிவாவிடம் செல்ல முனைந்தான்.

கோமதியும், மாலினியும் சிவாவைப் பார்க்கத் துடித்தார்கள். ' என் கணவன் வெறும் வாய்ப்பந்தல்காரனல்ல, அவன் ஒரு சாதனை வீரன்' என்று மனதிற்குள் புகழ்ந்தவாறு அவன் அருகே செல்ல விழைந்தாள் துளசி.

" இது ஒரு இலட்சியவீரனின் வெற்றி" என்று பக்கத்தில் நின்ற ஜனங்களுக்கு ஆனந்தக்கண்ணீருடன் கூறினாள் உமா.

சிவா தன் வெற்றிக்களிப்பை இரு கைகளையும் உயர்த்தி கூடி நின்றவர்களிற்கு காட்டினான். பலர் அவனைப் பலவிதமாகவும் பாராட்டினார். அவனால் தொடர்ந்து நிற்க முடியவில்லை. இரத்தம் பெருமளவு வெளியேறியிருந்தது. அவனை உடனே வைத்தியசா லைக்கு எடுத்துச் சென்றனர்.

ஒருவாரம் மருந்தும் கட்டிலுமாக வைத்தியசாலையில் இருந்தான். அவன் குடும்பத்தினர் எல்லோரும் சென்று பார்த்தனர். துளசி அவனைப் பார்க்க வரும் நேரமெல்லாம் உமா அங்கு நின்றாள். 'இவளிற்கு இங்கு என்ன வேலை ? இன்னொருத்தியின் கணவ னென்று தெரிந்தும், அவரைத் தன் வலையில் மடக்கிப் போட பேயாக அலைகிறாள் என்று மனதிற்குள் கசந்து கொண்டு, உமாவை எரித்துவிடுவது போலப் பார்ப்பாள்.

'வாங்க துளசியக்கா" என்றாள் உமா.

' என்னை நீ வரவேற்கிறாயா ?' என்று உள்ளுக்குள் பொருமினாள் துளசி.

சிவாவின் உடல் ஓரளவு குணமாக வீட்டிற்குச் செல்லலாம் என்றார் டாக்டர்.

"அண்ணை ! அண்ணியோடு நீங்கள் ஒற்றுமையாகும் வரை எங்கள் வீட்டில் வந்திருங்கோ" என்று சுகுவும், கோமதியும் ,,மாலினியும் மாறி மாறிக் கேட்டார்கள்.

" கொஞ்ச நாட்கள் என் வீட்டின் தான் இருக்கவேண்டும் " என்று மறுத்துவிட்டான் சிவா.

"தம்பி, நாங்கள் உன்னோடு வந்திருக்கிறோம். சமைத்தெல்லாம் நான் தருவேன்" என்றாள் அம்மா. " அவனை என்ன கேட்பது ? வா அவனோடு போவோம் " என்று புறப்பட்டார் அப்பா கனகர்.

அவர்களைத் தடுத்து , "நீங்கள் இன்னும் கொஞ்ச நாட்கள் தங்கச்சி வீட்டிலேயே தொடர்ந்து இருங்கோ. விரைவில் உங்களை என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன்" என்று கூறிவிட்டான் சிவா.

சுகு அவனைப் பார்த்து, "அண்ணா ! கடனைக் கொடக்க நீ இனி மேல் இப்படியெல்லாம் கஷ்டப்படவேண்டாம். நான் வங்கியில் கதைத்து கடன் தீர்க்க வழி செய்கிறேன்" என்றான்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போ கோமதியும் அருகில் வந்து, " நானும் பத்தாயிரம் ரூபா தருகிறேன் " என்றாள்.
அவர்கள் இருவரையும் அன்புடன் பார்த்த சிவா, " இன்னும் கொஞ் சக்காலம் பொறுங்கோ. என்னால் முடியாவிட்டால் நீங்களும் உதவி செய்யலாம்" என்று மறுத்துவிட்டான்.
நாட்கள் சென்றன. பரிசுத்தொகை இருபத்தையாயிரத்தையும் எடுத்து வீட்டு வாடகை, சண்கமுகம் கடைக்கடன், அக்கம் பக்கத்தில் ஐந்தும் பத்துமாக வாங்கிய கடன்கள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு, மிகுதியை கடன்காரரிடம் கொடுத்தான்.
மேலும் சில நாட்கள் நடந்தபோது பிளேக்கிடம் இருந்து ஒரு தந்தி வந்தது. அவனை உடனடியாகத் தன்னுடன் ரெலிபோனில் தொடர்பு கொள்ளும்படி அறிவித்திருந்தார். அவனும் தபாற்கந்தோருக்குச் சென்று பதிவு செய்து அவருடன் ரெலிபோன் தொடர்பு கொண்டான்.
ஈரான் ஈராக்கில் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தைப் படமெடுப்பதுடன் அங்கிருந்து செய்திகளையும் உடனுக்குடன் மத்திய செய்தி ஸ்தாபனத் திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இதனால் ஏராளமான பணம் கிடைக்கும். ஆனால் உயிருடன் திரும்பி வருவது கடினம். முதலு தவி ஆட்களையே கண்மண் தெரியாமல் சுட்டிருக்கிறார்கள். அங்கு படமெடுப்பதோ, செய்திகளைச் சேர்ப்பதோ, நடக்காத காரியமென்று பல செய்தி ஸ்தாபனங்கள் அங்கு செல்ல மறுத்துவிட்டன. இதனால் தான் இதற்கு இவ்வளவு அதிக பணம் தருவதாகச் சொல்கிறார்கள். உன்னால் முடியுமா ? போக விரும்பினால் என்னுடைய கமரா, மற்றும் கருவிகளை எடுத்துக் கொண்டு நீ போகலாம். ஆனால் இது சாவோடு விளையாடுவது போன்றது. உன்னைக் கொலைக்களத் திற்கு அனுப்புகின்றேன் என்று நினைக்காதே. உனக்குப் பெரும் பண நெருக்கடி என்று நீ முன்பு எனக்குச் சொன்னதால் இதை உனக்குத் தெரிவிக்கிறேன். உயிரோடு திரும்பி வந்தாலும் பணம் வரும் ; செத்தாலும் பணம் வரும் என்று பிளேக் சொல்லவும், சிவா ஒரு கணமும் யோசிக்காது சம்மதித்தான். அவனுக்கு வேண்டிய விபரங் கள் எல்லாவற்றையும் கூறியதுடன், உடனுக்குடன் செய்திகளையும் படங்களையும் தன் விலாசத்திற்கு அனுப்பும்படி கூறினார் பிளேக்.
மூட்டை முடிச்சுக்களுடன் புறப்பட்டான் சிவா.
" அண்ணா வேண்டாம் ! இது ஆபத்தானது ! " என்று சகோதரங்கள் தடுத்தனர்.
" என் பிள்ளை எதைச் செய்தாலும் யோசித்துத் தான் செய்வான். அவனைத் தடுப்பது சரியில்லை ' என்று கவலையை மறைத்துக் கொண்டு அவனை வழியனுப்பினார் கனகர். " மகனே வெற்றியோடு திரும்பி வா" என்று அழுது கொண்டே வாழ்த்திய கண்ணகி , "நீ மீண்டும் இங்கு நலத்துடன் திரும்பி வரும் வரை நான் கண்ணன் கோவிலிற்குச் சென்று , அவனைத் தொழுது கொண்டே இருப்பேன்" என்றாள்.
துளசியும் அவனைத் தடுத்துப் பார்த்து இயலாது விட்டு விட்டாள். உமா தானும் வருகிறேன் என்றாள். சிவா அவளைக் கேலி செய்து சிரித்தான். அவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாள்.
விமானம் புறப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



சிவாவிற்கு பக்கத்து சீற் காலியாக இருந்தது. பலதையும் யோசித்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான். சிறிது நேரங்கழித்து ஒரு பெண் வந்து தன் பக்கத்தில் உட்கார்வது தெரிந்தது. அவன் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு சிங்களமோ, தமிழோ பேச்சுக் கொடுத்தால் பயணம் அலுப்படிக்காது என்று நினைத்தவன், பிறகு ஏதோ நினைத்தவனாய் சீ... வேண்டாமென்று விட்டு சற்று கண்களை மூடிக் கொண்டிருந்தான். அவன் தொடையில் ஒரு கை ஊர்வதை உணர்ந்து விழித்துப் பார்த்தான். அப்பெண்ணின் கரம் தானது அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சிறிது பேசாமல் இருந்தான். அப்போ அப்பெண்ணின் கை அவன் தொடையில் மெதுவாகக் கிள்ளியது. அதற்கு மேலும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. அவள் கையை எடுத்துவிட்டுக் கொண்டே கோபமாக அவளைப் பார்த்த அவன் அதிர்ந்து போய் இருக்கையைப் விட்டு எழமுனைந்தான். அவன் கையைப் பற்றி, அவனை எழும்பவிடாது தடுத்துக் கொண்டே சிரித்தாள் உமா. " நீ... நீயா...? என்று தடுமாறினான் சிவா.

"ஆமாம் ; அமைதியாக இருங்கோ. மற்றவர்கள் ஏதாவது நினைக்கப் போகிறார்கள் " என்ற அவள், மெதுவாக மேலும் சொன்னாள். " நான் வருகிறேனென்று அன்று சொன்னபோது நீங்கள் என்னைப் பார்த்து ஏளனம் படச் சிரித்தீர்கள். அப்போ உங்களைக் கட்டாயப் படுத்திக் கேட்டும் பயனில்லை என்று அப்பா மூலமே இதற்கு ஏற்பாடு செய்தேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்றாள்.

" நானே அங்கு எங்கு போய் நிற்பது ? எங்கு தங்குவது ? என்று தெரியாமல் போகிறேன். நீயும் வந்தால்.. என்ன செய்யப் போகிறோமோ ? " என்று தடுமாறிய அவனை,

" உங்களுக்கு அந்தச் சங்கடங்களை நான் வைப்பேனா ? என்னைப் பற்றி யோசிக்காதேங்கோ. நான் என்னைப் பார்த்துக் கொள்வேன். நீங்கள் படமெடுக்கின்ற உங்கள் வேலையைக் கவனமாகப் பார்த்தால் சரி. "

" அப்போ தங்குவது ?"

"நீங்கள் எங்கே தங்கப் போகிறீங்கள் ?"

" எல்லாம் போய்த்தான் தேடவேண்டும் .

" அப்போ எனக்கும் சேர்த்துத் தேடினால் ஆச்சு. " என்றாள் உமா.

" உனக்கு விளையாட்டாக இருக்கிறது. ஆனால் நீ என்னோடு கூட வருவது ஊரிற்குத் தெரிந்தால் எங்கள் இருவரையும் சேர்த்து என்ன கதைக்கும் தெரியுமா ?"

" ஊர் கதைப்பது இருக்கட்டும். உங்களுக்கு அங்கு ஒன்றென்றால் இந்த ஊர் உதவி செய்ய வருமா ? சேர் ! நீங்கள் போகுமிடத்தின் பயங்கரத்தை ஓரளவு தெரிந்தவள் நான். உங்களைத் தனியாக விட என்னால் முடியாது. "

இதன்பின் உமாவுடன் இது பற்றி வாதாடி பிரயோசனமில்லை என்பதால் வேறு திசையில் பேச்சை மாற்றினான் சிவா.

ஈரானை விமானம் வந்தடைந்தது. விமான நிலையத்தைத் தாண்டி வெளி வருவதில் பல சங்கடங்கள், விசாரணைகள். மிகுந்த சிரமத்தின் பின் சிவாவும், உமாவும் ஈரானுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். போரால் நாடு தலைகீழாகக் குழம்பிக் கிடந்தது. எப்படியோ

படிப்பகம்

www.padippakam.com



அதிலேறி, இதிலேறி , அவரைக்கேட்டு, இவரைக் கேட்டு பல அவஸ்தைகளைச் சந்தித்த பின்யுத்தம் உக்கிரமாக நடக்கும் எல் லைப் பகுதிக்கு வந்தனர். அங்கிருந்து சற்றுத் தள்ளி கொஞ்சம் யுத்தபயமும் குறைந்த ஓர் கிராமத்தில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து சிவா தன் வேலைகளைத் தொடங்கினான்.

எரிந்த வீடுகளையும் ,சிதைந்த கட்டிடங்களையும் அங்கங்கள் சிதறிய நிலையில் அலங்கோலமாக வீழ்ந்து கிடந்த ஆயிரமாயிரம் மனித உடல்களையும் காண சிவாவிற்கு நெஞ்சு பிரிந்து விடும் போல வேதனை முட்டியது. ! என்னடா இது உலகம் ? மனிதனை மனிதன் ஈவிரக்கமின்றிக் கொல்லுகின்றான். !' என்று நினைத்துக் கொண்டே படங்களை எடுத்தான். செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த சிலரும் ஆங்காங்கே படுகாயமுற்றவர்களைத் தேடி உதவி புரிந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சிலருடன் சிவா பழக்கத் தையேற்படுத்திக் கொண்டு, அவர்களுடன் சேர்ந்து சென்றான்.
குண்டு வீசும் விமானங்கள் மழையெனக் குண்டுகளை வீசிக் கொண்டே போகும். அவற்றில் சில ஈரானியரால் சுடப்பட்டும் வெடித்தும் சிதறும். இரவு பகலென்று வேறுபாடின்றி குண்டு வெடிப் புக்களும், தீப்பிடிப்புக்களும் , புகைமண்டலமும் , மரண ஓலங்களும் நிறைந்து கிடந்தன.
சிவா தான் எடுத்த படங்களை உமாவிடம் கொண்டு வந்து கொடுத்து, தான் பார்த்தது, கேட்டது எல்லாவற்றையும் கூறுவான். அவள் அவற்றை ஆங்கிலத்தில் அழகாக எழுதி அவற்றைச் சரி பார்த்துவிட்டு, வீடியோ மூலம் எடுத்த படங்கள், பேட்டிகளிற்கு ஆங்கிலத்தில் விபரங்களை ஒளிப்பதிவு செய்து எல்லாவற்றையும் உடனுக்குடன் பிளேக்கிற்கு அனுப்பி வைத்தாள். பிளேக் அவற்றை விற்பனை செய்தார். இதனால் சேர்ந்து கிடந்த செய்தி ஸ்தாபனம் மீண்டும் உயிர் பெற்றது.
உமா ஏதோ சமைப்பாள். பசிக்கு எல்லாம் அமிர்தமே என்று இரு வரும் உண்பார்கள். சமைப்பதற்குத் தனியே இடமிருந்தபோதும் , இருப்பதற்குப் படுப்பதற்கும் ஒரு சிறிய அறையேயிருந்தது. அவன் திருமணமானவன். அவள் திருமணமாகாதவள். இருவருக்கும் இளமையும், உணர்வுகளும் இருந்தன. அருகருகே படுத்தார்கள். அசையாமல் நீட்டி, நிமிர்ந்து படுத்தாலும் ஒருவரில் ஒருவர் முட்டா மல் படுக்கமுடியாது. அது தான் அவர்கள் இருவருக்கும் படுக்கை. முதலில் இருவரும் தங்களைத் தாங்கள் குறுக்கிக்கொண்டு படுக்க முனைந்தார்கள். ஆனால் எவ்வளவு நேரத்திற்கென்று அப்படிப் படுப்பது ? அரைத் தூக்கத்திலேயே ஒருவர் கையை மற்றவரை அணைக்கச் செய்தது. கால்கள் கூட மற்றவர் கால்களுடன் இணைந் தன. நெற்றியென்று முத்தமிட்டு விட்டு இதழ்களை நோக்கின. அவ்வளவு தான் இருவருமே படுக்கையை விட்டு எழுந்திருந்தார் கள். உமா சென்று தண்ணீர் எடுத்து வந்து இருவருமே அருந்தி விட்டு மீண்டும் படுத்தார்கள்.
" என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ சேர் " என்றாள் உமா.
" ஏன் ? உன் உதடுகள் மட்டுமா வந்தன ? என் உதடுகளும் தானே வந்தன. "
"மனதில் எவ்வளவு நல்ல எண்ணங்கள் , ஒழுக்கம் , கடமை

படிப்பகம்

www.padippakam.com



என்பன இருந்தபோதும் இப்படியொரு சந்தர்ப்பம் வரும்போது இவையெல்லாம் எங்கோ ஒழித்துக் கொண்டு உணர்ச்சிகளை மட்டுமே அரசாள விட்டு விடுகின்றன."

" உமா ! நாம் இருவரும் மரக்கட்டைகளல்ல ;உணர்ச்சியுள்ள மனிதப்பிறவிகள்; அத்துடன் நோயாளிகளல்ல; சுகதேகிகள். ஆயினும் மிகுந்த மனக்கட்டுப்பாடு கொண்டவர்கள். அது தான் விபத்து நடக்க முன்பே விழித்துக் கொண்டோம்."

அவள் சிரித்தாள்.

" நூறாண்டு காலம் எங்கள் நட்பு நிலைக்கவேண்டும்" என்றாள்.

"நூறாண்டு போதாது; ஆயிரமாயிரம் ஆண்டுகள் எங்கள் நட்புத் தொடரும். மறு பிறவி ஒன்றிருந்தால் இருவரும் பெண்களாகவோ அல்லது ஆண்களாகவோ பிறக்கவேண்டும். அப்போ தான் இந்த உணர்ச்சிகளினதும், ஊராரினதும் உபத்திரவங்களிலிருந்து தப்பி உண்மை நட்புடன் இருக்கமுடியும் " என்றான் சிவா.

"அதற்காக கடவுளை இருவரும் வேண்டுவோம்" என்றாள் உமா.

மீண்டும் நித்திரை இருவரையும் அணைத்தது. ஈரான், ஈராக் யுத்த நிலைமைகளை அறிய உலகநாடுகளெல்லாம் ஆவலாக இருந்தன. இதனைத் தெளிவாகவும் விபரமாகவும் நல்ல பேட்டிகளுடனும் பிளேக் செய்தி ஸ்தாபனம் விநியோகிப்பதறிந்து, சகல ரி. வி. ரேடியோ நிலையங்களும் அவரிடமே செய்திகளை வாங்கின. இதனால் அதிகளவு பணம் அவருக்குக் கிடைத்தது.

பெருமளவு உயிர்ச்சேதங்களின் பின் இரு நாடுகளும் பேச்சுவார்த்தைக்கு ஒன்று பட்டன. யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த மனித கொலைக்களத்திற்கு ஓய்வு கிடைக்கப் போகின்றது என்று சிவாவும், உமாவும் சந்தோஷப்பட்டார்கள்.

" இன்றும்போய் ஆறுதலாக சில படங்களை எடுத்து வருகிறேன். நாளை ஓய்வெடுத்துக் கொண்டு மறுநாள் நாட்டிற்குத் திரும்புவோம்" என்று விட்டு சிவா படமெடுக்கப் புறப்பட்டான்.

இன்னும் சில குண்டுகள், துப்பாக்கிகள் ஒலிப்பதி லிருந்து யுத்த நிறுத்தம் முழுதாகச் செயற்படுத்தப்படவில்லையென்பது தெரிந்தது.

சிவா நடந்து நடந்து படமெடுத்துக் கொண்டிருந்தான். சில ஈரான் இராணுவத்தினர் கூட்டமாக நின்று போர் நிறுத்தத்தைப் பற்றிக் கதைப்பது தெரிந்து, அவர்களிடம் ஆங்கிலத்தில் பேட்டி கண்டான்.

அப்போ...

மேலே ஒரு கழுகு இல்லை... குண்டு வீச்சு விமானம். வீழ்ந்தன குண்டுகள். வெடித்துப் பறந்தது புகைமண்டலம்; மனித உயிர்களின் இறுதி அலறல் ஒலி நான்கு திசைகளையும் கிழித்தது.

நீண்டநேரம் சிவா திரும்பாதது கண்டு, அவனைத் தேடி உமா புறப்பட்டாள். பலரிடம் விசாரித்தாள். பொங்கல் வெடிகள் போன்று இன்னும் குண்டுகள் வெடிப்பது கேட்டு, அவள் நெஞ்சம் சிவாவை நினைத்துப் பதறியது. அப்போ அவள் யாரையோ தேடுவது தெரிந்து செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து விசாரித்தார். பின் தன் நண்பர்களிடம் போய்க் கேட்டு வந்து, சிவா, குண்டு வெடித்ததால் படுகாயமுற்று உயிருடன் போராடும் நிலையில் செஞ்சிலுவைச் சங்க சிகிச்சை மண்டபத்தின் படுக்கையில் வைத்திருப்பதாகக் கூறி அவளை அ ங்கு அழைத்துச் சென்றார்.

படிப்பகம்

www.padippakam.com



உமா அந்த மண்டபத்திற்குள் புகுந்தாள். அங்கு பெருமளவில் காயமுற்றோர் போதிய வைத்திய வசதியின்றி வேதனையில் அலறிக் கொண்டு படுத்திருந்தனர். புண்களின் மணம் நெஞ்சைக் குமட்டியது. அத்தனை பேரிற்குள்ளும் மிகுந்த பிரயத்தனப்பட்டு சிவாவைக் கண்டு பிடித்தாள் உமா. அவன் உடம்பு பூராவும் பாண்டேச். கண் விழிக்கும் நிலையில் அவன் இல்லை. துடித்துப் பதறிய உமா அங்குமிங்கும் ஓடினாள். அவனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் படி பல அதிகாரிகளிடம் கெஞ்சினாள்.

" ஒரு ஆளுக்கு மட்டும் அப்படி வசதி செய்ய முடியாது. வைத்திய சாலைக்குக் கொண்டு போவதானால் இத்தனை பேரையும் கொண்டு போகவேண்டும். அதற்கு எங்களுக்க வசதியில்லை" என்று விட்டார் கள்.

" கடவுளே !" என்று அலறிக் கொண்டு , மீண்டும் சிவாவின் பக்கத் தில் சென்று அவனைத் தொட்டு, " சேர்.... சேர்" என்று அழைத் துப் பார்த்தாள். அவன் மயக்கத்தில் ஏதுமறியாதவன் போலக் கிடந்தான். உமா நிதானித்துச் சிந்தித்தாள். பின் ஓடிச்சென்று பிளேக்கிற்கு இங்கிலாந்திற்கு ரெலிபோன் எடுக்க முயன்றாள். பல மணி நேர தாமதத்தின் பின்பே லைன் கிளியரானது. பிளேக்கிடம் அவசரமாக விடயத்தைச் சொன்னாள் உமா. அவர் பலரிடம் ரெலி போன் கதைத்ததன் பேரில் சிவாவை செஞ்சிலுவைச் சங்க வண்டி யில் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள். உயிர் இன்னும் அவனுடலில் ஊசலாடிக் கொண்டிருந்தது. வைத்தியச் செலவிற்கு பிளேக் ரெலக்ஸில் பணம் அனுப்பி வைத்தார். டாக்டர்கள் அவ னைக் காப்பாற்ற இரவுபகலாக உழைத்தனர். இரண்டு மாதங்களின் பின் சிவா குணம் பெற்று வைத்தியசாலையால் வெளியேறி வந்தான். அவன் இடது கை குண்டிற்குப் பலியாகிவிட்டது. வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால், அவன் இனிமேல் தாண்டித்தாண்டித் தான் நடக்கவேண்டும். உடம்பெங்கும் காயத்தின் கரிய தழும்புகள். உமாவும், சிவாவும் தாங்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று அறையைக் காலி செய்துவிட்டு இலங்கை திரும்பினர்.

சிவாவும் உமாவும் வரப்போகிறார்கள் என்ற செய்தி அறிந்து அவர் களை வரவேற்க சிவா வீட்டார் விமான நிலையத்திற்கு புறப்பட்ட னர். சிவாவுடன் உமா சேர்ந்து போனதால் கொதித்துக் கொண்டி ருந்த துளசி, " அண்ணை வருகிறார் கூட்டப் போகிறோம் நீங்களும் வாங்கோ" என்று சுகு கேட்டபோது மறுத்து விட்டாள். இது தெரிந்து உமாவின் அப்பா துளசியிடம் சென்று " வா துளசி !சிவா உயிர் மீண்டு வருகிறான். அவனை நீ விமானநிலையத்திற்குச் சென்று வரவேற்க வேண்டும்" என்று வற்புறுத்தினார்.

" உங்கள் மகள் தான் அவர் கூட வருகிறாளே. பிறகு அவருக்கு என்னை எதற்கு ?" என்றாள்.

" ஓ!அப்படியா ? சிவாவையும் , உமாவையும் பற்றி நீ அறிந்து வைத்திருப்பது இவ்வளவு தானா ?" என்று அவளை ஏளனம் படப் பார்த்தார்.

" உங்கள் மகளை அவருக்கு இரண்டாந்தாரமாகக் கட்டி வைக்கத் தானே நீங்களும் சேர்ந்து அவர்களை இப்படி நெருங்கிப்பழக விட் டிருக்கிறீங்கள். "

படிப்பகம்

www.padippakam.com



"துளசி !" என்று உறுக்கிய அவர்,
" நீ உருவத்தில் பெரியதாக வளர்ந்திருக்கிறாயே தவிர உள்ளத்தால் இன்றும் சிறியவளாகவே இருக்கிறாய். என் மகள் வயதில் சிறிய வள். ஆனால் உள்ளத்தால் பெரியவள். அவள் காண்பது காதல் கனவுகள் இல்லை. இலட்சியக் கனவுகள். இந்த ஊருக்கும் சமு தாயத்திற்கும் ஏதாவது பயன்படும் வகையில் உழைக்கவேண்டும் என்று தான் அவள் சிறு வயது தொட்டு எண்ணிச் செயற்பட்டு வருகின்றாள். உன்னைப் போல், என்னைப் போல், அற்ப ஆசைக ளுக்கு அடிமையாகுபவளல்ல. உன் கணவன் உமாவின் உள்ளத்தைப் புரிந்து கொண்ட, அவள் அன்பிற்குப் பாத்திரமான நல்ல நண்பனே தவிர காதலனோ, கணவனாகப் போகிறவனோ அல்ல " என்றார்.
அவர் வார்த்தைகள் துளசிக்கு நெஞ்சில் தேனோடு பால் கலந்தது, போலிருந்தது. அள்ளியடித்துக்கொண்டு எல்லோருடனும் சேர்ந்து சிவாவை வரவேற்கப் புறப்பட்டாள்.
சிவாவும் உமாவும் விமானத்தை விட்டிறங்கினர். அவர்களைக் கண்டதும் மாண்டவர் மீண்டும் வந்தது போன்ற மகிழ்ச்சி அத்தனை பேர் உள்ளத்திலும் , முகத்திலும் பொங்கி வழிந்தது.
உமாவை அவள் தாயும், தந்தையும் ஆனந்தக்கண்ணீருடன் அணைத் துக் கட்டிக் கொஞ்சினர்.
சிவாவின் கையிலும், காலிலும் ஏற்பட்ட இழப்புக்களையும் அவனுட லில் ஏற்பட்ட காயங்களையும் கண்டு நெஞ்சு குலுங்க குளம் உடைத் தது போல கண்ணீரைக் கொட்டினர் அவன் குடும்பத்தினர்.
துளசி அவன் காலில் வீழ்ந்து கதறினாள். தன்னை மன்னித்துவிடும் படி வேண்டினாள்.
" என் பிள்ளை உயிரோடு வந்ததே கண்ணனின் திருவருள் தான்" என்று தன்னைத் தேற்றினாள் அம்மா கண்ணகி.
கனகர் தன் மகனை நெஞ்சு நிறையப் பாசமழை பொழிய , தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். தங்கள் அண்ணனை தங்கள் குடும்பத்திற்காகத் தன்னை இழக்கத் துணிந்த தியாகச்சுடரைக் கண்டு, பேச வார்த்தை எழாது உள்ளமெல்லாம் அன்பு கடலெனக் குமுற, தாங்கள் இதுவரை நாட்களும் இந்த அண்ணனை புரியாதவர் களாய் ஒதுக்கி நடந்துவிட்டோமேயென்று வெட்கம்பட நாணி நின்ற னர் சகோதரங்கள்.
துளசி சிவாவுடன் சேர்ந்துவிட்டாள். உமா அவர்களை வாழ்த்தி னாள். ஊரே சிவாவின் பெருமை மிக்க செயல் கண்டு வாழ்த்திப் புகழ்ந்தது.
சில நாட்கள் சென்றன. பிளேக் நேரில் வந்து சிவாவைச் சந்தித் தார். ஆனந்த மிகுதியால் கட்டிக் கொஞ்சினார். அவன் உயிரை வெறுத்து செய்த அவன் உழைப்பிற்கு பத்து இலட்ச ரூபா கொடுத்த துடன், அவனுக்கேற்பட்ட விபத்துக்கு நஷ்ட ஈட்டுக்காசும் விரை வில் வரும் என்று கூறி அன்புடன் விடைபெற்றார்.
உமா வந்தாள் தொடங்குவோமா எங்கள் திட்டத்தை ? என்றாள்.
" ஆம் " என்றான் சிவா.
முதலில் தன் கடமைகளைச் செய்தான். கடன்கள் அடைக்கப்பட் டன. அவன் பரம்பரை வீடும், நிலமும் அவனுடைய கைக்கு மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com



வந்தது. அதில் தன் பெற்றோருடனும் துளசியும் தானும் குடியேறி னான்.
ஊரில் கட்டாந்தரையாகக் கிடந்த ஒரு நிலத்தை வாங்கி மீன்பிடித் தொழிற்சாலை ஒன்றைக் கட்டினான். நூற்றுக்கு மேற்பட்டோருக்கு வேலை கிடைத்தது. பாலர் பாடசாலைக்குப் பக்கத்தில் கிடந்த வெறுந்தரையை வாங்கி அனாதைப் பிள்ளைகளிற்காக பள்ளிக்கூட மும் விடுதியும் கட்டினான். அதன் திறப்பு விழா பெரிதாகக் கொண் டாட ஏற்பாடானது. ஊரே குதூகலமாக கூடியிருந்தது. கனகர், கண்ணகி இருவருமே தங்கள் வீட்டுக்குடிபூரல் விழா நடப்பது போன்று சந்தோஷத்துடன் நின்றார்கள். அவர்கள் செவிகளில் தங்கள் மகனின் சாதனைகளை ஊரார் வாய்கள் புகழ்ந்து உரைப்பது வீழ்ந்து உள்ளத்தைப் பூரிக்க வைத்தது.
சுகு, கோமதி, மாலினி யாவரும் குடும்பத்துடன் இன்பம் பொங்க வந்து சிவாவின் வியக்கத்தக்க செயல்களை எண்ணிப் பெருமையுடன் நின்றனர். உமாவும் துளசியும் பல முக்கியமான விடயங்களைக் கவனிக்க பறந்து பறந்து செயற்பட்டனர். திறப்பு விழாவிற்கான அரசாங்க அனுமதி பெற சிவா ஒரு நண்பனை அனுப்பியிருந்தான். அவர் அனுமதி கிடைக்கவில்லையென்று வெறுங்கையோடு திரும்பி வந்தது கண்டு, அரசாங்க தலைமை அலுவலகத்திற்குக் காரைச் செலுத்தும்படி றைவரிடம் கூறிவிட்டு சிவா அவசரமாக காரிலேறி, "விழாவைத் தொடங்குங்கோ". நான் அனுமதியோடு வருகின்றேன். என்றான் கார் புறப்பட்டது.
அரசாங்க அலுவலகம் சென்று பல கதவுகள் திறந்து மூடி சரியான ஆளைச் சந்தித்து, அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட சந் தோஷம் தலைக்கேற காரில் ஏறி விரைந்து செல் என்று றைவரை விரட்டினான் காரும் பறந்தது.
சிவாவின் நெஞ்சில் ஒரு வெற்றிக்களிப்பு. தன் கடமைகளைச் செய்துவிட்ட திருப்தி. அவனுள்ளம் கண்ணனுக்கு ஆனந்தக்கண் ணீருடன் நன்றி கூறியது. ' என் கனவுகளை நிறைவேற்றி வைத்த தெய்வமே உனக்கு என்றும் நான் அடிமையப்பா. நீ என்றும் என் தலைவன் அப்பா" என்று அவன் கடவுளை நினைத்தான்.
கார் சந்திகள், வளைவுகள் என்று பாய்ந்து கொண்டிருந்தது. இன் னும் ஒரு சந்தியைக் கடந்தால் மேலும் சிறிது தூரம் சென்றால் திறப்பு விழா நடைபெறும் இடம் வந்துவிடும். ஆனால் அதற்குள் சந்தியில் , மறு வீதியில் வந்த தேங்காய் லொறி நின்று பார்த்துப் போகவேண்டியது நில்லாமல் விரைந்த போது, சிவா வந்த காருடன் மோதியது டொமார் என்று இடி இடித்த சத்தம் எட்டுத் திசையும் அதிர வைத்தது. கார் சப்பையாகி நடுச்சந்தியில் சக்கரமாக சுழன்று ஓய்ந்தது.
ஒரு சூரியன் அஸ்தமனமாகிவிட்டான். ஆமாம் ! றைவர் மயிரிழை யில் உயிர் தப்பினார். ஆனால் , அன்பிற்காக, கடமைக்காக, குடும்பத்திற்காக வாழ்ந்த அந்த தியாகச்சுடர் அணைந்துவிட்டது.
" ஐயோ மகனே ! என்று நெஞ்சிலடித்துக் கொண்டு கதறினாள் கண்ணகி.
" என் பிள்ளை... என் பிள்ளை.. என்று திக்கித் திக்கி கொண்டு நெஞ்சு வெடித்தது போல் வேதனையால் துடித்தார் கனகர்.

www.padippakam.com



இதயமே பிரிந்துபோய்விட்டது போலச் சுருண்டு வீழ்ந்தாள் துளசி. சுகு இரத்தமெல்லாம் வற்றிவிட்டது போல வலுவிழந்தான்.
கோமதி மண்டையில் அடிஅடியென்று அடித்தவாறு , " அண்ணா அண்ணா என்று கதறினாள். மாலினி உலகமே இருண்டது போ வேதனை பொங்க அலறினாள்.
உமாவை மனநோய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவேண்டி வந்தது.
அவனது இறுதி ஊர்வலம் உறவினரினதும் ஊராரினதும் கண்ணீர் மழையுடன் நடந்து முடிந்தது.
டென்மார்க்கிலிருந்து சிவாவின் கடைசித்தம்பி ரமணி விடயமறிந்து தன்னுடலில் ஒரு பகுதியை இழந்துவிட்டது போல, உள்ளம் வருந்தி அழுது குழறிக்கொண்டே விமானம் ஏறி ஊரிற்கு வந்தான். அவனால் அண்ணனின் ஒரு பிடி சாம்பலைத் தான் காணமுடிந்தது.
" அண்ணா ! என்று வானம் வெடிக்கக் கத்திக்கொண்டே, சிவாவை எரித்த அந்தச் சுடலை மேட்டில் ரமணி வீழ்ந்து புரண்ட காட்சி பார்த்து நின்றவர் நெஞ்சங்களை உருக வைத்தது. அவனை மிகுந்த சிரமத்துடன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.
சிவா இல்லாத அந்த வீடு. கதிரவன் இல்லாத வானம் போல வெறிச்சோடிக் கிடந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் கிடந்து வேதனையுடன் வெம்பிக் கொண்டிருந்தார்கள்.
சிவா உயிருடன் இருந்தபோது அவனைத் தம்பிகளும் , தங்கைகளும், பாசம் நெஞ்சை நிரப்பி நின்ற வேளையிலும் அதனை சட்டை செய்யாது, அவனிடம் மனம் விட்டுப் பேசாது தங்கள் அலுவல்களிலும் தங்கள் புதிய உறவுகளுடனும் ஒதுங்கி பிரிந்திருந்தார்கள். இன்று நிரந்தரமாக அவன் அவர்களை விட்டுப்பிரிந்த போது உண்மைப்பாசம் உள்ளத்தையுடைக்க அழுது புலம்புகிறார்கள்.
சிவா மீது உயிரையே வைத்திருந்தாள் அவன் மனைவி துளசி. இன்பமாக வாழ்ந்தார்கள். இடையிலே சிறிய தகராறு பிரிந்துவிட்டார்கள். கொஞ்சக்காலம் விலகியிருந்ததால் அவன் மனம் மாறுமென்று அவள் நினைத்தாள். இப்படிக் காலன் பாதியில் வந்து தன் கணவன் உயிரைக் கொள்ளை கொண்டு போவான் என்று அவள் கனவில் கூட நினைத்திருக்கமாட்டாள். இப்போ, " என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ " என்று தொண்டை கிழியும்படி கத்துகிறாள், கதறுகிறாள். இனி இவையெல்லாம் அவன் காதில் கேட்குமா ?
அது தான் மனிதர்களாகிய நாங்கள் உயிருடன் இருக்கும் வரை ஒருவருக்கொருவர் அன்பாக இருக்கப் பழகிக் கொள்ளவேண்டும். சிறிய கருத்து வேறுபாடுகளிற்காக அண்ணன், தம்பிகள், அக்கா, தங்கைகள், கணவன், மனைவி , அன்பு நண்பர்கள் என்பேர் பிரிந்து இருப்பது அர்த்தம் இல்லாதது வாழ்வது சிலகாலம் தான். அதற்குள் மனம் விட்டுப் பேசிக் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையாக இருக்கப் பழகிக் கொள்ளவேண்டும். அதை விட்டு ஒருவர் இறந்த பின், மற்றவர் தலை முடியைப் பிய்த்து எறிந்து, மண்டையை மோதுவதால் இறந்தவர் திரும்பி வந்துவிடுவாரா ?

படிப்பகம்

www.padippakam.com



சிவா, கண்ணனிடம் வருந்திக் கேட்டபடி அவன் கடமையை நிறைவேற்றிவிட்டான் கண்ணன். கடமை முடிந்தது அவன் கண்களும் மூடிக்கொண்டன.

அவன் அமைத்த மீன்பிடித் தொழிற்சாலையும், அநாதைவிடுதியும் உமாவாலும், துளசியாலும் திறம்பட நடாத்தப்பட்டன. இதனால் பல குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தன. பல அநாதைப் பிள்ளைகள் பணவசதியில்லாத பிள்ளைகள் படித்து முன்னேற வழி அமைந்தது.

உயிருடன் இருக்கும் வரை தனக்காக வாழாத அவன், இறந்த பின்னும் எல்லோர் உள்ளங்களிலும் வாழ்கிறான்.

படியுங்கள்!
தாயகத்து நினைவுகளை
சுமந்துவரும்
பத்திரிகை...

ஈழநாடு
EELANADU GERMANY
MITTLERER HASENPFAD 37,
6000 FRANKFURT 70, GERMANY.
Tel: 069/61 54 21, Fax: 069/69 44 42

படிப்பகம்

www.padippakam.com



# எழுத்தாளன்



## சோழியபுரத்து கண்ணன்

"என்னங்க எப்ப பார்த்தாலும் கதை எழுதுகிறது தானா வேலை... வீட்டிலே அரிசி.'. பருப்பு கிடையாது. எப்படி சமைக்கிறது. லைட் பில் ... வீட்டு வாடகை எதுவுமே கட்டவில்லை சோஷல் காசும் முடிந்துவிட்டது என்ன செய்கிறது... எல்லாரும் வேலைக்கு போய் உழைக்கிறாங்க நீங்க என்னடாவென்றால் கதை எழுதுகிறதிலை காலத்தை கழிக்கிறீங்க.. இதாலே நட்டமே தவிர இலாபம் கிடையாது" வழமை போல் எழுத்தாளர் துரையின் மனைவி பாக்கியம் தனது பல்லவியைப் பாட இதை காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல் கதை எழுதுவதில் மூழ்கிக்கிடந்தார்.

துரையின் எழுத்து திறமையை புகழாதவர்களே கிடையாது. ஆனால் வீட்டில் வறுமை நிலை, வயதுக்கு வந்தவிட்ட பெண்பிள்ளைகள் ஜெர்மனுக்கு வந்த கடன் வேறு...

துரையால் வேறு வேலை செய்ய முடியாது.. காரணம் எழுத்துலகம் தான் அவருடைய உலகம் இரவு பகல் என்று எழுதிக்கொண்டே இருப்பார். வேலைக்கு போனாலும் அவருடைய சிந்தனைகள் இலக்கியங்கள் பற்றி சுற்றி வருமே தவிர வேலையில் பதிந்து இருக்காது. இதனால் எந்த வேலையிலும் அவரால் தொடர்ந்து நிற்க முடியவில்லை.

தான் எவ்வளவு தான் கத்தினாலும் அதை காதில் போட்டுக் கொள்ளாத புருஷனை நினைக்க பாக்கியத்துக்கு ஆத்திரம் ஏற்பட்டது. " இதை எழுதி என்னத்தை கண்டிங்க... யார் தான் காசு

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்து வாங்கி படிக்கிறாங்கள்... எல்லாத்தையும் மண்ணெண்ணைய் ஊற்றி கொழுத்தினால் தான் நம்மைப் பிடிச்சு இருக்கிற சனியன் நம்மை விட்டு போகும் என்றபடி துரை தடுக்க எல்லா புத்தகங்களையும் அள்ளி வீட்டு முற்றத்தில் குவித்து மண்ணெய் எடுத்து ஊற்றிவிட்டு தீ மூட்ட முயலும்போது ' வணக்கம்' என்றபடி 38 வயது மதிக்கத்தக்க ஒருவர் தாடி மீசை வளர்த்து சோகமே உருவாக நிற்பதைக் கண்ட பாக்கியம் ' யாரோ வந்திருக்கிறாங்க' என்றபடி வீட்டுக்குள் செல்ல துரை அவரை வரவேற்று ஆசனமொன்றில் அமரும்படி சொல்ல ஆசனத்தில் அமர்ந்த அவர் 5000 டி. எம். பெறுமதியான செக்கை துரையிடம் நீட்டியபடி ' ஐயா உங்களுக்கு தான்... நீங்கள் இளைஞர்களுக்காக எவ்வளவோ புத்தகங்கள் எழுதியிருக்கிறீங்கள். இளைஞர்களுக்காக அவர்களுடைய வாழ்க்கை அந்நிய மண்ணில் நல்லபடி அமைய இன்னும் எழுதவேணும். ஐயா... வீட்டை நாட்டை மறந்து வாழ்ந்த நான் உங்கள் எழுத்துக்களை படிச்ச பிறகு தான் குடிக்கிறதை, விபச்சாரிகளிடம் போகிறதை எல்லாம் விட்டு விட்டு திருந்தி வாழ்கிறேன்... என்னை போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிற நீங்கள் கஷ்டப்படுகிறதாக அறிந்தேன். என் மனசு தாங்கவில்லை அது தான்

' வேண்டாமப்பா.. நம்ம மண்ணிலே நம்முடைய மக்கள் உண்ண வழியின்றி கஷ்டப்படுகின்றார்கள். அவங்களுக்கு இந்த பணத்தை அனுப்பு அதுவே எனக்கு ரொம்ப சந்தோஷம்' என்று துரை வாங்க மறுக்க இரு வருடைய உரையாடல்களையும் கேட்டுக் கொண்டிருந்த பாக்கியம் இளைஞனின் கையிலிருந்த செக்கை பிடுங்கிக் கொண்டு ' இவருக்கு என்ன தெரியும் எனக் கல்லவா வீட்டுக் கஷ்டம் தெரியும். ' என்றபடி துரை எவ்வளவோ தடுத்தும் கேளாமல் செக்குடன் வீட்டுக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

இளைஞன் ' ஐயா இந்த பணம் உங்களிடம் இருக்கட்டும். இனிமேல் நாட்டு மக்களுக்கு உதவி செய்கிறேன். 'தம்பி நீ யார் ? உன்னைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?'

'ஐயா என்னைப்பற்றி ஒரு நாவல் எழுதலாம். சுருக்கமாக சொல்லுகிறேன். என் குடும்பம் ஏழ்மையானது கடன்பட்டு என்னை ஜெர்மனிக்கு அனுப்பி வைக்க வீட்டு கஷ்டங்களை உணராமல் சிநேகிதர்களுடன் சேர்ந்து போதை வஸ்து பாவித்து விபச்சாரிகளிடம் போய் காலத்தை கழித்தேன். என் குடும்பத்தை இராணுவம் அழித்த




படிப்பகம்

www.padippakam.com



போது கூட நான் கவலைப்பட வில்லை. ஏனெனில் என் குடும் பத்தின் மீது அக்கறையில்லை.. ஒரு கார் விபத்தில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும்போது தான் உங்களுடைய "இளைஞர்க ளின் கையில் தான் நாட்டின் சுதந் திரம்" என்ற புத்தகம் வாசித்தேன். அன்றிலிருந்து திருந்திவிட்டேன். அது மட்டுமல்ல அடுத்தகிழமை ஊருக்கு போறன். இயக்கத்தோடு சேர்ந்து போராடப் போகிறன். - இங்கே இருந்து அநியாயமாக செத் துப் போகிறதை விட எங்கள் மக் களுக்காக போராடி இறக்கிறது சிறந்தது தானே என்றபடி துரை யின் பதிலை எதிர்பார்க்காமல் புறப்பட்டவன் முற்றத்தில் கிடந்த புத்தகங்களை எடுத்து அடுக்கி தனது தோள்பையில் போட்டபடி "ஐயா இவற்றை என்னோடு எடுத் துக் கொடு போகிறேன்" என்றபடி புறப்பட்டு போய்விட்டான்.

துரை சிலையாக நின்றுவிட்டார். தான் காண்பது கனவா, நிஜமா தன்னை ஒருக்கா கிள்ளி பார்த்த பிறகு தான் நடந்தது எல்லாம் நிஜம் என புரிந்து கொண்டார்.

என்னத்தை இவ்வளவு நாளும் எழுதிக்கிழிதேன். இதனால் என்ன பயன் என பிறர் கேட்கும் போது தன்னையே பலமுறை துரை கேட்டு இருக்கிறார். இன்று தான் விடை கிடைத்தது. தனது எழுத்தால் ஒரு இளைஞன் திருந்தி இருக்கிறான் என்று நினைக்கை யில் சந்தோஷமாக இருந்தது.

" வண்ணத்துப் பூச்சிக்காக " துரை மேசையில் அமர்ந்தபடி " ஒரு இளைஞனின் கதை" என்ற நாவலை எழுதத் தொடங்கினார்.

(முற்றும்)


## படியுங்கள்!

* தவறுகள்
  **-ரஜனி குகநாதன்**
* ஊரடங்கப் பாடல்கள்
  **-சில்லையூர் செல்வராசன்**
* தலைவர்கள் வாழ்க மாதோ
  **-சில்லையூர் செல்வராசன்**
* கரும்பனைகள்
  **-வி. ரி. இளங்கோவன்**
* சிகரம்
  **-வி. ரி. இளங்கோவன்**
* கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பபாடும்
  **-எஸ். அகஸ்தியர்**
* கடலில் ஒரு படகு
  **-காசி வி. நாகலிங்கம்**
* உணர்வுகள்
  **-ரி. தயாநிதி**
* விடிவை நோக்கி
  **-வண்ணை தெய்வம்**
* இனப்பிரச்னை தீர்வுகள்
  **-வி. ரி. தமிழ்மாறன்**
* ஒரு மனிதன்
  **-சு. கருணாநிதி**
* அழாத உலகம்
  **-காசி வி. நாகலிங்கம்**

ரஜனி பதிப்பகம்

**79, Av. des M. Chateaubriant,**
**93700 Drancy,**
**France.**


படிப்பகம்

www.padippakam.com



# ஒரு சந்திப்பு....

## நகைச்சுவைக் கலைஞர் ஐசாக் இன்பராஜா

**வ. பூ:** வணக்கம் திரு ஐசாக் இன் பராஜா அவர்களே.
**ஐசாக்:** வணக்கம்.
**வ. பூ.:** கலையுலகில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?
**ஐசாக்:** மானிப்பாய் இந்துக்கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கும் போது 15 வயதிலேயே மேடைகளில் ஏறி நடிக்க ஆரம்பித்தேன். அப்படி படித்துக்கொண்டிருந்த காலத்தில் நடித்த காசியப்பனின் கதையான "சிங்ககிரிக் காவலன்" என்ற நாடகம் பாடசாலையில் மிகவும் புகழைப் பெற்றுத் தந்தது. பின்பு பாடசாலையை விட்டு விலகியும் பழைய மாணவர்கள் என்ற ரீதியில் தொடர்ந்து பாடசாலையில் நாடகங்களை மேடையேற்றி வந்தோம்.
**வ. பூ:** பழைய மாணவர்கள் சார்பில் என்னென்ன நாடகங்களை நடித்துள்ளீர்கள் ?
**ஐசாக்:** இரா பாலச்சந்திரன் எழுதிய நாடகங்களான ஹரேராம ஹரே கிருஸ்ணா, மச்சானைப் பார்த்தீங்களா, அட்டமத்துச் சனியன், ஏரம்பு ஓரம்போ, ஓமானுக்கு போன சீமான் போன்ற நாடகங்களில் பிரதம நகைச்சுவைப் பாத்திர வேடமேற்று நடித்துள்ளேன்.
**வ. பூ:** தனிநடிப்பிலும் சரி, இணைந்த நடிப்பிலும் சரி பெயர் பெற்று விளங்குகின்றீர்கள். இதற்கு ஆரம்பத்தில் நடிப்பு நுணுக்கங்களை யாரிடமாவது கற்று அறிந்திருக்கிறீர்களா ? அல்லது அனுபவரீதியாகப் பெற்றதா ?
**ஐசாக்:** ஆரம்பத்தில் கலைநுணுக்கங்களையும், நாடகப் பயிற்சியையும் எனக்கு அளித்தவர் மதிப்புக்குரிய அமரர் கலைஞர் எஸ். அருமைநாயகம் அவர்கள். இன்றைய சந்ததிக்கு அவரை அறிய வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் ஒரு இலட்சியத்துக்காக வாழ்ந்த திறமையும், புகழும் பெற்ற கலைஞர். முதலமைச்சர் எம். ஜி. ஆர். உதவியால் வாகினி ஸ்ருடியோவில் எடிட்டிங் டைரக்ஷன் துறையைப் பயின்று பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் திரைப்படமான " யாருக்காக அழுதான்" திரைப்படத்தை எடிட் செய்தவரும், 'நாம் மூவர் ' என்ற படத்தில் நடித்து உதவி டைரக்டராகக் கடமையாற்றி பின் இலங்கையில் திரைப்படம் எடுக்கும் நோக்கத்தோடு நாடு திரும்பி 'நிர்மலா' என்ற ஈழத்துத் திரைப்படத்திற்கு எடிட்டிங், டைரக்ஷன் செய்தார். பின் ஈழத்தில் நாடகங்களை மேடையேற்றி, இதன் விளைவாக ஏற்படும் செலவீனங்களுக்கு தனது உடமைகளை விற்று இறுதிவரை கலைஞனாக வாழ்ந்த இலட்சியக் கலைஞர்.
**வ. பூ:** உங்கள் வில்லிசை நிகழ்ச்சிக்கு மக்கள் மத்தியில் எத்தகைய வரவேற்பு இருந்தது என்று சொல்ல முடியுமா ?
**ஐசாக்:** அந்த நேரத்தில் திருப்பூங்குடி ஆறுமுகம், கலைவாணர்

www.padippakam.com



சின்னமணிவடிவேலு ஆகியோர் வில்லிசையில் பெயர் பெற்று விளங்கினர்.
நாம் அப்போ வயதில் குறைந்தவர் களாக இருந்தபோதும் எங்கள் வயதுக்கேற்ற சுமாரான ஆதரவு கிடைத்தது.

**வ. பூ:** நீங்கள் கலைவாணர் சின்னமணி அவர்களின் வில்லிசைக் குழுவில் இருந்ததாக அறிகிறேன். எவ்வாறு சின்னமணி அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது?

**ஐசாக்:** திரு. சின்னமணி அவர்கள் வில்லிசைக்கு வரமுன் ஒரு சிறந்த நாடகக்கலைஞன். நாடக ரீதியில் எனக்கும், அவருக்கும் அடிக்கடி தொடர்புகள் இருந்தது. அதே சமயம் உத்தியோக மாற்றம் காரணமாக எமது ஈஸ்வரன் குழுவில் சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்பட்டதால் குழு தொடர்ந்து இயங்கமுடியாத நிலையேற்பட்டது. அப்போ சின்னமணி அவர்களின் குழுவில் நான் இணைந்து கொண்டேன்.

**வ. பூ:** இலங்கையில் வில்லிசை வேந்தன், கலைமணி என்ற பட்டங்களைப் பெற்ற கணபதிப் பிள்ளை சின்னமணி வில்லிசையால் எங்கள் மக்களை ஈர்த்த பெரும் கலைஞர். இவரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறமுடியுமா ?

**ஐசாக்:** இலங்கையில் மாத்திரமல்ல, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் கூட அவரது புகழை நேரடியாகக் கண்டேன். பொதுப்பணிக்காகவும், கலைச்சேவைக்காகவும் தனது முழுநேரத்தையும் அர்ப்பணித்தவர். தன்னுடன் இணைந்து இயங்கும் கலைஞர்களைத் தன் குடும்பத்தில் ஒருவராகக் கருதி அன்புடன் உதவி ஒத்தாசைகள் புரிந்து உயர்த்திவிடும் உயர்ந்த உள்ளம் கொண்டவர்.



## "15 வயதிலேயே நடிக்க ஆரம்பித்தேன்"

**வ. பூ:** நல்லது, நீங்கள் இலங்கையில் சஞ்சிகையும் நடத்தி வந்ததாக அறிகிறேன். இது பற்றிக் கொஞ்சம் சொல்லமுடியுமா ?

**ஐசாக்:** நான் சுரபி அச்சகத்தின் முகாமையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இணுவையூர் பாஸ்கர் நடத்திய 'குயில்' என்ற சஞ்சிகையில் உதவியாளனாக இருந்தேன். அதன்பின் 'இளநகை' என்ற நகைச்சுவை சஞ்சிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்தேன். இந்திய சஞ்சிகைகளின் ஆக்கிரமிப்புக்கு ஈடுகொடுக்க முடியாததால் தொடர்ந்து நடத்த முடியவில்லை. இதன்பின் இரா. பாலசந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'சர்மிளா' சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகக் கடமையாற்றினேன்.

**வ. பூ:** இத்தனை புகழும் சிறப்பும் இருந்தும் நீங்கள் ஜெர்மனிக்கு வருவதற்கு ஏதாவது முக்கிய காரணம் உண்டா ?

**ஐசாக்:** நாட்டில் பிரச்னைகள் உருவானதால் (அந்தக் காலகட்

படிப்பகம்

www.padippakam.com



டத்தில் 1985 ) நான் நடத்தி வந்த அச்சகத்தை சிறந்த முறையில் நடாத்துவதோ, கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்துவுதோ சாத்தியமாக இல்லாமலிருந்தது. அதே வேளை எனது சகோதரி இராணுவத்தால் சுடப்பட்டு அகாலமரணமடைந்ததால் ஏற்பட்ட மனவேதனையும் நான் இங்கு வருவதற்குக் காரணமாக இருந்தன.

**வ. பூ:** உங்கள் திருமணம் காதல் திருமணமா அல்லது பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டதா?

**ஐசாக்:** பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட காதல் திருமணம்.

**வ. பூ:** உங்கள் மனைவி உங்களுடன் இணைந்து கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதுண்டா?

**ஐசாக்:** என்னுடன் மேடைகளில் பங்கு பற்றியதில்லை. ஆனால் மிகவும் கலை ஆர்வம் கொண்டவர். எனது கலைத்துறைக்கு தன்னாலியன்ற சகல ஒத்துழைப்பையும் தரும் எனது சிறந்த ரசிகை.

**வ. பூ:** ஜெர்மனியில் உங்கள் சொந்தப் பெயரைச் சொல்லிக் கேட்பதைவிட 'லூஸ் மாஸ்டர் ' என்றால் தான் அநேகருக்குத் தெரிய வருகிறது. இப்படி அழைப்பதால் உங்ககளுக்கு மனவருத்தம் ஏற்படுவதில்லையா?

**ஐசாக்:** 'லூஸ் மாஸ்டர்' என்று அழைப்பது எனக்கு ஒருபோதும் மனவேதனையை ஏற்படுத்தியதில்லை. மாறாக இந்தப் பெயரில் நான் நடித்த பாத்திரம் இத்தனை ஆழமாக மக்கள் மனதில் பதிந்திருப்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன். உதாரணமாக மேஜர் சுந்தரராஜன், என்னத்த கன்னயா, லூஸ் மோகன் போன்றவர்களுக்கு அவர்கள் ஏற்று நடித்த பாத்திரப் பெயர்கள் இணைந்திருப்பது போல, லூஸ் மாஸ்டர் என்ற பாத்திரம் என் பெயருடன் இரசிகர்களால் இணைக்கப்பட்டுவிட்டது.

**வ. பூ:** தாயகத்தில் கலைத்துறையில் உயர்ந்து விளங்கிய நீங்கள், இங்கேயும் அங்கு நடாத்தியது போல நாடகங்களையோ, வில்லிசை நிகழ்ச்சிகளையோ நடத்த முடியுமா ?

**ஐசாக்:** முடியும்; ஆனால் அதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. இங்கு வேலைப்பிரச்னை, இடப்பிரச்னை, நாம் கூட்டுச் சேர்ந்து ஒத்திகை பார்ப்பதற்கோ, இயங்குவதற்கோ பெருந்தடையாக உள்ளது. திறமையுள்ள கலைஞர்கள் ஜெர்மனில் வெவ்வேறு பகுதியில் இருப்பதால் இவர்களை ஒன்று சேர்த்து, ஓரிடத்தில் சந்திப்பதே சிரமமாக இருக்கிறது. அப்படிச் சேர்ந்து இணைந்தாலும் இதனால் ஏற்படும் பிரயாணச் செலவுகளை ஈடு செய்ய முடியாத நிலை என்பன இதற்குத் தடையாக உள்ளன.

**வ. பூ:** இன்றைய காலகட்டத்தில் ஜெர்மனியில் வாழும் தமிழ்க்கலைஞர்களைச் கலைச்சேவைக்கு என்ன பங்களிப்பைச் செய்யலாம்.

**"லூஸ் மாஸ்ரர் என்ற பெயரில் நான் நடித்தபாத்திரம் இத்தனை தூரம் மக்கள் மனதில் பதிந்திருப்பது பெருமையைத்தான் தருகிறது"**

படிப்பகம்

www.padippakam.com



**ஐசாக்:** என்னைப் பொறுத்தவரை பொதுவாக இந்நாட்டில் நடாத்தப் படும் எந்த நிகழ்ச்சியிலும் தயங் காமல், ஊதியத்தை எதிர்பாராமல் பங்கெடுக்கவேண்டும். இந்நாட் டில் கலை மூலம் வருமானம் பெற்று வாழ்க்கை ஓட்டவேண்டும் என்ற சூழ்நிலை இல்லை. ஆகவே எந்தக்கலைஞரும் எந்த அமைப்பு அழைப்பு விடுத்தாலும் முன்வந்து கலைநிகழ்ச்சிகளை வழங்கி, இத்தகைய செயற்பாடு களை ஆதரிக்கவேண்டும் என்பது என் தனிப்பட்ட விருப்பம்.

**வ. பூ:** கடந்த 25 ஆண்டுகள் கலைத்துறையில் ஈடுபட்டுள்ளீர் கள் இவ்வாறு நிலையாக நிற்ப தற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா ?

**ஐசாக்:** நான் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ கலை யால் நன்றாகச் சம்பாதித்திருக்கி றேன். எனினும் எந்தக் காலகட் டத்திலும் இது தான் எனது சம் பாத்தியம் என்று இதில் நான் தங் கியிருக்காமல் எனது சொந்த வேலையில் முதற்கவனம் செலுத்தி, அடுத்து கலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால் இன்றைக்கும் பாதிப்பின்றிக் கலையுலகில் இருக்கின்றேன்.

**வ. பூ:** திரு. ஐசாக் இன்பராஜா அவர்களே ! நீங்கள் தொடர்ந்தும் கலையுலகில் நிலைத்து நின்று பெயரும் புகழும் பெற நல்வாழ்த் துக்களைக் கூறி விடைபெறுகின் றோம் . நன்றி.

"கிடைக்கும்
சந்தர்ப்பத்தை
கலைஞன்
தவறவிடக் கூடாது"




படிப்பகம்

www.padippakam.com



# என்னுடன் ஒரு நிமிடம்

"காசி"

மேலே நீண்டு விரிந்த நீல வானம் கீழே பொன்னும் பயிரும் விளையும் பூமி இடையில் இதமான மென்காற்று. இந்த வளமான உலகிலேயே பிறந்து அதுவும் அங்கவீனமில்லாத முழு மனிதராக வாழும் நாம் இறைவன் தந்த இதயத்தில் இனிக்கும் அன்புக்கோ பொறுமைக்கோ இடந்தராமல் இடியும் மின்னலும் போலச் சீறிச் சினக்கின்றோம். எரிமலையும் பூகம்பமும் போல எரிந்து விழுகின்றோம். கொந்தளிக்கும் கடல் போல கொதித்து எழுகின்றோம். புயலும் சூறாவளியும் போல பேராசையில் அலைகின்றோம் ஏன் இந்த வேகம் ? ஏன் இந்தக் கோபம்?

மிருகங்களின் வழிவந்தவன் தான் மனிதன் என்று விஞ்ஞானம் சொல்கிறது. எனினும் மிருகங்களை விட மேலாக வாழவேண்டும் என்று கடவுள் மனிதனைப் புத்தி ஜீவியாகப் படைத்திருகின்றான். உத்தியோகம் பார்க்கவும், பணத்தைப் பெருக்குவதற்காகவும் இறைவன் எமக்கு இந்தப் புத்தியைத் தரவில்லை. புரிந்து கொண்டு வாழுங்கள். பூவின் மென்மையை உள்ளத்தில் தாங்குங்கள். கல்லில் நடந்தாலும் உங்கள் நெஞ்சத்தில் பஞ்சின் தன்மை தவழட்டும் என்று தான் மனிதனுக்கு மதியைக் கொடுத்திருக்கிறான் இறைவன்.

வான்மதிக்கு ஒளி கொடுப்பவன் வெய்யோன். எங்கள் மதிக்கு அறிவொளி கொடுப்பவன் இறைவன். இந்த அறிவொளியில் தடங்கல்கள் ஏற்படும் போது சங்கடங்கள் எங்களைச் சந்திக்க திரள்கின்றன. இந்த சங்கடங்கள் எங்களை அணுகாது தள்ளி நிற்கவேண்டுமென்றால் எங்கள் மதியில் மனிதத்தன்மை ஊறியிருக்கவேண்டும்.

அரம் போலும் கூரியதாகவிருந்தாலும் மனிதப்பண்பு இல்லாத மனிதர்கள் மரம் போலாவார் என்று வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

இந்த மனிதப்பண்பை நாம் ஒவ்வொருவரும் நெஞ்சில் இருத்த வேண்டும். மனிதனுக்கு மனிதபண்புகள் இயற்கையாக வந்தமைகின்றன. ஆனால் சிலர் அதனை வாழும்போது நழுவவிட்டு விடுகிறார்கள். சிலர் அதனை வெளியே விரட்டிவிடுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



எனது நண்பன் திறமைசாலி அவன் புகழிலும் செல்வாக்கிலும் என்னை மிஞ்சி நிற்கின்றான். அவனை முந்து என்று என் மனம் அந்தரிக்கிறது. நேர்மையான வழியில் -மனிதப்பண்புகளை நெஞ்சில் கட்டிக் கொண்டு அவனை வெல்ல முடியாது. ஏனெனில் நண்பன் என்னைவிட ஆற்றல் மிக்கவன். இதனை எண்ணி என் நெஞ்சு குமுறிக் கொந்தளிக்கின்றது. அவனை மற்றவர்கள் புகழ்ந்து பாராட்டுவதைப் பார்க்க பொறாமை எரிமலையாய் வெடிக்கிறது. ஏன் இந்தப் பொறாமை ? ஏன் இந்தக் கொந்தளிப்பு ?

முயல் வேகமாக ஓடுகின்றது என்று எறும்பு சீறிச் சினப்பதில்லை. அது தன்னளவில் சுறுசுறுப்பான பிராணி என்று மனிதன் உதாரணம் உரைக்கும் வண்ணம் தன் வேகத்தைக் காட்டுகிறது. நாங்கள் மனிதர்கள் எங்கள் திறமைக்கேற்ப எமது செயற்பாடுகளை செய்யவேண்டுமே தவிர எம்மை விட திறமையும் ஆற்றலும் மிக்கவர்களின் செயற்பாடுகளைக் கண்டு அவர்களில் வெறுப்போ பொறாமையோ கொள்ளலாகாது.

வெறுப்பும் பொறாமையும் நெஞ்சில் இடங்கொள்ளும் பட்சத்தில் பகையும் பூசலும் பிறக்கின்றது. எமது திறமையை நேர்மையான வழியில் இட்டுச் செல்லாமல் குறுக்கு வழிகளுக்கும் சதியாலோசனைகளுக்கும் மனதில் இடங்கொடுத்து மனித பண்புகளை மண்தோண்டிப் புதைத்துவிட்டு எரிச்சல், பொறாமை, புறங்கூறல் என்பவற்றில் எம் பொன்னான நேரத்தை பாழடித்து எமது வாழ்க்கையை வீணடிக்கின்றோம். இதனால் எமது செயற்திறன்கள் முடக்கப்படுகின்றன. புகழ் குன்றிச் சிறுமையும், பணம் விரயமாகி வறுமையும் எம்மை நோக்கிப் படை எடுக்கின்றன.

மனதில் சுத்தம் இருக்கும்போது முகத்தில் செந்தளிப்பு சூரியனாய் பிரகாசிக்கிறது. கண்களில் அன்பு ஒளி வீசுகிறது. அத்தகைய மனிதர்களைப் பார்த்தால் இன்னுமொருமுறை பார்க்கச் சொல்லியிருக்கும். அவர்களுடன் பேசினால் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டேயிருக்கச் சொல்லும். இத்தகையவர்கள் தங்கள் நெஞ்சிலே அன்பை இருத்தி மனிதபண்புகளை மதித்து மனிதனை மதித்து நடப்பவர்கள். இவர்கள் உள்ளத்தில் பொறாமை புகாது. இவர்கள் மீது கூடச் சிலர் பொறாமை கொள்ளக் கூடும். பொறாமை கொண்டு அவதூறுகளையும் இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்தக் கூடும். அத்தகைய வேளையிலும் மனத்தெளிவும் சுத்தமும் உள்ளவர்கள் இவற்றினால் எந்தப் பாதிப்பும் அடையமாட்டார்கள். இவர்கள் தங்களை வசைகூறி இடர் தந்தவர்களுக்கும் நன்மை செய்து அவர்கள் நாணி வெட்கப்படத்தக்க முறையில் வாழ்வார்கள்.

ஒரு மனிதனின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாயிருப்பது இந்த மனம், வளமாக வாழவேண்டும் என்ற பேராசையில் இருக்கின்ற வளமான வாழ்க்கையையும் வாழத் தெரியாமல் சிலர் பாழாக்குகிறார்கள்.

அறுநூறு ரூபா மாத வருமானத்துடன் திருப்தியாக வாழும் மனங்களும் இருக்கின்றன. அறுபதினாயிரம் வந்தாலும் திருப்தியின்றி அலைபவர்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



கட்டிய மனைவி தங்கச்சிற்பம் போல வீட்டில் இருக்கையில் திருப்தி இல்லாது அலைபவர்களையும் காண்கிறோம். கட்டிய மனைவி விட்டுச் சென்ற போதும் ஒழுக்கத்தைக் கட்டிக்காக்கும் மனிதர்களையும் காண்கின்றோம்,. இதற்குக் காரணம் மனமே தவிர வேறு எந்தக் காரணமும் சான்றாக அமைய முடியாது.

மனதில் தெளிவு இருக்கும்போது தவறுகள் குறைகின்றன.

மனதில் தெளிவு இருக்கும்போது மனிதர்களின் நேசம் பெருகுகிறது.

மனித நேசம் பெருகும்போது நட்புகளும் உறவுகளும் எம்மை சூழ்கின்றன.

வாழும்போது மனிதனாக மனிதர்களுடன் வாழவேண்டும். ஒதுங்கி ஒழிந்து வாழ்வது வாழ்க்கையாகாது.

மனிதர்களுடன் பழகினால் பணம் செலவாகிவிடும். பிரச்னைகள் வரலாம். சோலிகள் தலையெடுக்கும் என்று இனசனங்களிலிருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டு தங்களுக்குள் ஒரு குறுகிய உலகத்தை அமைத்து வாழ்பவர்களையும் காண முடிகிறது.

இவர்கள் முள்ளுக்குத்திவிடும் என்று பூப்பறிக்காமல் இருப்பவர்கள்.

முட்களை ஒதுக்கிப் பூக்களைப் பறிப்பது போல தீயவர்களை ஒதுக்கி நல்லவர்கள் ஒருங்கிணைவதால் தீயவர்கள் மனந்திருந்த வாய்ப்பளிக்கப்படுகின்றது.

தீயவர்கள் என்று யாருமே முத்திரை குத்திக் கொண்டு இவ்வுலகத்தில் பிறக்கவில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் மனதில் தீய எண்ணங்களை அதிகமாக வளர்த்துவிட்டதால் சில மனிதர்கள் தீமைகளைச் செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறார்கள். இவர்களும் மனதில் தெளிவு ஏற்படுமானால் நல்லவர்களாவதற்கு வழி பிறக்கின்றது.

மனது என்பது எம் உடலில் எங்கேயிருக்கின்றது? நெஞ்சில் இதயத்தில் என்று அதிகமாக எல்லோரும் சொல்கிறார்கள்.

கல் நெஞ்சன், இதயத்தில் ஈரமில்லாதவன் என்று சிலரை நாம் ஆத்திரத்தில் ஏசுகின்றோம். இதயம் மனிதனது மிக முக்கியமான உறுப்பு. வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. அது இயங்காவிட்டால் மனித வாழ்க்கை முடிகிறது என்பவற்றைக் கொண்டு இதயத்தை மனம் உள்ளம் என்று கருதுவது காரணமாக இருக்கலாம் . ஆனால் மனத்தில் தான் சிந்தனைகள், யோசனைகள், நினைவுகள், கற்பனைகள், செயற்பாடுகள் எழுகின்றன. இதனால் மனம் என்பது மூளையைத் தான் குறிக்கவேண்டும். மூளை தான் எம் உடலையுஞ்சரி எம் செயற்பாடுகளையும் சரி ஆள்கிறது. மூளை இயங்காவிட்டால் எமது சகல இயக்கங்களும் நின்று விடுகின்றன. எமது மனமும் உணர்வுகளும் அங்கு தான் இருக்கின்றன.

வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்த எங்களில் பலரும் ஆசைகள் அலைபாயும் இளம்பராயத்தில் வந்தவர்களே. இந்த வயதில் நல்லெண்ணங்கள், முன்னேற்றத்திட்டங்கள், முயற்சிகள் இருந்தபோதும் 'குறும்புத்தனம்', விளையாட்டு சுபாவம், அதை இதை அனுபவிக்கவேண்டும் என்ற துடிப்பு என்பன இருப்பது இயற்கையே. நாங்கள் நினைத்தபடி வாழ்வதற்கு இந்த நாடு இடங் கொடுக்கிறது. இத

படிப்பகம்

www.padippakam.com



னால் ஓகோ என்று எம் மனம் போன போக்கில் வாழ்கின்றோம். யாராவது எமது நலன் கருதி இப் படிச் செய்வது சரியல்ல என்று அறிவுரையோ ஆலோசனையோ கூறினால் இவர் யார் எனக்கு புத்தி சொல்வதற்கு என்று எமது மனத்தில் சீற்றம் எழுகிறது. இந் தச் சீற்றம் சரியானதா? தவறு என்று ஒருவர் எமது செயலைச் சுட்டிக்காட்டினால் ஒரு தட வைக்கு இரண்டு தடவை அத னைச் சிந்தித்து உண்மையிலே தவறிருந்தால் திருத்திக் கொள் வது புத்திசாலித்தனம்.

சிலர் தவறு என்று தெரிந்தும் இவர்சொல்லி நான் திருந்துவதோ என்று ஒரு பிடிவாதக் குணத்தில் தவறான பாதையிலே தொடர்கி றார்கள். இது அவர்கள் எதிர்கா லத்தை மட்டுமல்ல வருங்கால சந்ததியையும் பாதிக்கும் என்பதை உணர்ந்து தவறுகளை இயன்ற வரை களைந்து வாழப்பழகவேண் டும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய பெற்றோர்கள். பெற்றோர்கள் எவ் வழியோ பிள்ளைகளும் அவ்வ ழியே. நாம் கற்ற கல்வி, நமது பழக்க வழக்கங்கள், நமது குண இயல்புகள், நமது பண்பாடுகள் என்பன எம்மூலம் எமக்குப் பின் வரும் சந்ததிக்கு தொடரப் போகி றது. இதனால் நாம் எமது நன்மை கருதாவிட்டாலும் எம் பிள்ளைகளின், எமது வருங்கால சந்ததியின் நன்மை கருதியாவது மனதிலே தெளிவை ஏற்படுத்தி அன்பு, சத்தியம், தர்மம், நீதி, சமாதானம், ஒற்றுமை என்பவற் றிற்கு இடங்கொடுத்து வாழ்ந்தால் தான் எம் சிறார்களும் அவற்றைப் பார்த்து அப்பழக்க வழக்கங்களை

## "நல்லெண்ணங்களுக்கு இடம்கொடுப்போம்"

தம் நெஞ்சில் தாங்கி வளமான வாழ்வு வாழக் கூடியதாக இருக் கும்,.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட் டும்' என்று சொல்வார்கள். சின் னஞ்சிறு குழந்தை அது இன்னமும் உடம்பு பிரட்டத் தொடங்க வில்லை. ஆனால் அதுக்கும் ஒரு மனம் இருக்கிறது. அந்தப் பச்சை மண்ணின் மனம் பெற்றோரின் செய்கைகளைப் பின்பற்றி கல்லும் முள்ளும் கடலும் புயலும் வந்து மோதும் இந்தப் பூமியிலே தன் பயணத்தை ஆரம்பிக்கின்றது. இந் தச் சின்னஞ்சிறிய பிள்ளையை இருபது முப்பது வருடங்களின் பின் ஈவிரக்கமுள்ள அன்பு நெஞ் சம் கொண்ட மனிதனாக்குவதோ அல்லது தயவு தாட்சணியம் இல் லாத கல் நெஞ்சக்காரனாக்குவ தும் தொட்டிலில் வைத்து தாலாட் டும் தாய் தந்தையர் கைகளில் இருக்கின்றது.

அன்பு மனதில் குடியிராதபோது எமது நலனுக்காக அடுத்தவர் களை துன்பத்தில் ஆழ்த்தவும் எம் மைத் தயாராக்கி விடுகிறது. இதனால் பகையும் அமைதியின் மையும் உருவாகின்றது. இதனைத் தவிர்த்து சமாதானமும் ஒற்றுமை யும் வளர்ந்து நின்று நிலைக்கும் நாள் உலகெங்கும் வரவேண்டுமா யின் நாம் ஒவ்வொருவரும் எமது மனத்தை அடக்கி அதில் இயன் றவரை அன்புக்கும் நல்லெண்ணங் களுக்கும் இடங் கொடுத்து வாழ முற்படவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



## என் வீட்டிற்கு அடுத்தவள்

மாடத்தின் மீதினிலே
உலாவுகின்ற கோதையல்ல
அவள் மண்குடிசையிலும்
வாழுகின்ற ஏழை அல்ல
அன்பினாலும் பண்பினாலும்
என்னுள்ளம் கவர்ந்தவள்
பாசத்திற்கும் நேசத்திற்கும்
என் வீட்டாருக்கு அடுத்தவள் தான்
அவளோடு பல வார்த்தை
பேசவில்லை இதுவரையில்
அவளோ என்னோடு கதைக்கவில்லை
சில வார்த்தை
ஆனாலும் மனதிற்குள்
விரும்புகிறேன்
நான் அவளை....
என் விருப்பை சொல்வதற்கு
உள்ளத்திலும் ஆசை தான்

ஆனால் என் நெஞ்சை
மறந்துவிட்டது பயமும் தான்
பயமதனை விட்டு விட்டு
கூற சென்றேன் அவளிடம் தான்
ஆனாலும் அவளிடம் அதை
சொல்லத்தான் முடியவில்லை
வெளிநாடு என்கின்ற
ஜெர்மன் இந் நாட்டிற்கு
வரவேண்டிய சூழ்நிலை
வந்துவிட்டது எனக்கும் தான்
வெளிநாடு வந்தது தான்
ஒன்றுக்கு நலமாச்சு
ஏனென்று சொல்கிறேன்
கீழே தான் வரைகின்றேன்

சிலவேளை என் விருப்பை
அவள் மறுத்து விட்டாலும்
அவளைத் தான் என் வீட்டாருக்கு
பிடிக்காமல் போனாலும்
இரு கவலையும் சேர்ந்து என்னை
கொன்று இருக்கும் இம்மட்டும்
எனவே தான் வாழ்கிறேன்
இந்நிமிடமும் நிம்மதியாய்

- சின்னத்துரை ராஜகருணா

படிப்பகம்

www.padippakam.com



## ஆசைகள்

சின்ன ஆசைகள் அல்ல
நெஞ்சில் சிதறிக் கிடப்பவை
சிறிய மனதின் சிந்தனையில்
நுழைந்துவிட்ட பெரிய ஆசை
பறவையாய் ஒரு தடவை
பிறந்து விட ஆசை
பறந்து சென்று உலகமெல்லாம்
பார்த்து விட ஆசை
மேகமாய் வானத்திலே உருவாகி
மலை முகட்டினை முத்த மிட ஆசை
தாகமாய் இருப்போர் தாகம் தீர்க்க
தண்ணீராய் ஊற்றெடுக்க ஆசை
குழந்தையாய் என்றும் உலகில்
இருந்து விட ஆசை
கொஞ்ச வேண்டும் என்னை
எல்லோரும் ஓடிவந்து என்ற ஆசை
மனிதர்களே இல்லா
மறுஉலகம் பார்க்க ஆசை
மனம் இணைந்த காதலர்கள் மட்டும்
வாழும் உலகு படைக்க ஆசை
வயலிலே நீண்ட பயிராய்
வளர்ந்து விட ஆசை
வசந்தமான காற்றினிலே
அசைந்து ஆட ஆசை
பனிக்கட்டி மேலே
படுத்து தூங்க ஆசை
பரவிக் கிடக்கும் கடலின் மேலே
நடந்து செல்ல ஆசை
நிலாவிலே வீடு கட்டி
நிரந்தரமாய் குடியிருக்க ஆசை
நீண்டு கிடக்கும் வானத்திலே
நிறைந்த நட்சத்திரங்களை எண்ணி விட ஆசை
மனித உருவம் தெரியாமல்
மருந்து கண்டு பிடிக்க ஆசை
மற்றவர்களைப் பற்றிக் கதைக்கும்
மனிதர்களின் கன்னத்திலே அறைய ஆசை
இத்தனை ஆசைகளை நிறைவேற்றிப் பார்த்திட
இரண்டு நூறு வருடங்கள் வாழ ஆசை

- ஆர். பாலா

படிப்பகம்

www.padippakam.com

அன்பர்களே



வணக்கம்



உங்களுக்குத் தேவையான தமிழ் ஆக்கங்கள் அனைத்தையும் அழகுமிகு தமிழ் எழுத்துக்களுடன் நீங்கள் விரும்பும் முறைகளில் கணனி (COMPUTER) மூலம் செய்து கொள்வதற்கும் மற்றும் உங்களுக்குத் தேவையான கணனியை (COMPUTER) எம்மிடம் வாங்குவதற்கும், ஆலோசனைகளுக்கும் நேரமான PROGRAM ஆங்கிலம், ஜேர்மன் அல்லது அழகுமிகு தமிழ் எழுத்துக்கள் (வேதா Fonts) Windows ஊடாக அனைத்துத் தொடர்புகளுக்கும்

வேதநாயகம் கபிரியேல்

Vethanayagam GABRIEL
Danneckerstr. 94
7470 Albstadt. 1
Germany

TEL:. 07431 / 72326 or 3592
Fax:. 07431 / 74059

படிப்பகம்

www.padippakam.com


அழகிய ஆடைகளுக்கும், தங்கவளையல் நகைகளுக்கும்

நீங்கள் மறவாது நாடவேண்டிய தரமான வியாபார ஸ்தாபனம்:

ORIENTALISCHE
TEXTILIEN & SCHMUCK

உங்கள் இல்லத்தேவைகளுக்கும், மங்களகர
வைபவங்களுக்கும் உங்கள் மனநிறைவுக்கேற்ற

வளையல், சங்கிலி, பதக்கம், அட்டியல் மற்றும் காதணிகள்
(வரி அறவிடப்பட்ட 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்)
பாரூறிஸ், காஞ்சிபுரம் மற்றும் எல்லாவகையான
இந்தியா, சிங்கப்பூர் ஜவுளிவகைகள்
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள்
அனைவருக்கும் அவரவர்க்கேற்ப பலவகை டிசைன்களில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

HAUPT-BAHNHOF , KÖNIGSWALL 16
UNDERGROUND, 4600 DORTMUND 1

T.P : 0231/162377


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்